# 2018 இலங்கை மனித உரிமைகள் அறிக்கை

## நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கை அரசியலமைப்பைக் கொண்ட, தேர்தலினால் தெரிவுசெய்யப்படும் அரசாங்கத்துடன் கூடிய பலகட்சி ஜனநாயகக் குடியரசாகும். 2015ஆம் ஆண்டு ஐந்துவருட காலத்துக்காக ஜனாதிபதி மைத்திரபால சிறிசேனவை வாக்காளர்கள் தெரிவுசெய்தனர். பாராளுமன்றம் ஜனாதிபதியுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்கிறது. 2015 ஓகஸ்ட் மாதம் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்கு அமைய இரண்டு பிரதான கட்சிகள் கூட்டணியாக ஆட்சியமைத்து பிரதமராக ரணில் விக்ரமசிங்க தெரிவுசெய்யப்பட்டார். இரண்டு தேர்தல்களும் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்தப்பட்டன.

சிவில் அதிகாரிகள் பொதுவாக பாதுகாப்பு படையினரைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

ஒக்டோபர் 26ஆம் திகதி ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பதவியிலிருந்து நீக்குவதாகவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதாகவும் அறிவித்தார். அத்துடன் பாராளுமன்றத்தை கலைக்கும் அறிவிப்பையும் வெளியிட்டார். பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்த இரண்டு நடவடிக்கைகளும் அரசியலமைப்புக்கு முரணானவை என சாவால் விடுத்தார். பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதி சிறிசேனவின் அறிவிப்பு அரசியலமைப்புக்கு முரணானது என டிசம்பர் 13ஆம் திகதி உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து ராஜபக்ஷ பதவிவிலகவேண்டி ஏற்பட்டதுடன், விக்ரமசிங்கவை டிசம்பர் 16 மீண்டும் பிரதமராக நியமிக்கும் நிலைக்கு சிறிசேன தள்ளப்பட்டார்.

சட்டத்துக்கு முரணான கொலைகள், சித்திரவதைகள், குறிப்பிடத்தக்க பாலியல் துஷ்பிரயோகங்கள், அரசாங்கத் தரப்புக்களால் மேற்கொள்ளப்படும் ஒருதலைப்பட்சமான தடுத்துவைப்புக்கள், இணையத்தளங்கள் முடக்கப்படுதல், தன்பாலின செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கலான எல்.ஜி.பி.ரி.ஐ நபர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், ஒரே பாலினத்தவர்களின் செயற்பாடுகள் குற்றமாக்குதல், ஊழல் உள்ளடங்கலான மனித உரிமை பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஒரே பாலினத்தவரின் பாலியல் செயற்பாடுகள் சட்டத்தினால் தடுக்கப்பட்டிருந்தாலும், மிகவும் அரிதாகவே வழக்குத் தொடரப்படுகிறது.

சட்டத்திலிருந்து தப்பிக்கொள்ளலாம் என்பதைப் பயன்படுத்தி பொலிஸார் தொடர்ந்தும் மக்களுக்குத் தொந்தரவு கொடுப்பதுடன், சிவில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படும் பாதுகாப்புப் படை உறுப்பினர்களுக்கு எதிராக பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறையொன்றை அரசாங்கம் இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை. இருந்தபோதும் இந்த வருடத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட சில அதிகாரிகளை விசாரிப்பதற்கும், அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து, தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

### பகுதி 1. நபர் ஒருவரின் நேர்மைக்கு மதிப்பளித்தல், பின்வரும் சுதந்திரங்களும் இதில் உள்ளடங்கும்:

### அ. தன்னிச்சையான உயிரிழப்பு மற்றும் ஏனைய சட்டவிரோதமான அல்லது அரசியல் நோக்கத்தைக் கொண்ட படுகொலைகள்

அரசாங்கம் அல்லது அதன் முகவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒருதலைப்பட்சமான அல்லது சட்டத்துக்கு முரணான கொலைகள் குறித்த பதிவுகள் உள்ளன.

ஜனவரி 20ஆம் திகதி கதிர்காமம் வெடிஹிட்டி கந்த பகுதியில் உள்ள பொலிஸ் காவலரணில் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கூறியும் நிறித்தாமல் சென்ற மோட்டார்சைக்கிள் ஓட்டியை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

யாழ்ப்பாண மாவட்டம் அரியாலை பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவரை சாதாரண உடையில் இருந்த விசேட அதிரடிப்படை உறுப்பினர்கள் இருவர் 2017 ஒக்டோபர் மாதம் சுட்டுக்கொன்ற சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணை நடத்தி வருகின்றனர். 2017 நவம்பரில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இரண்டு அதிகாரிகளையும் கைதுசெய்ததுடன், இது தொடர்பான வழக்கு 2019 பெப்ரவரிக்கு விசாரிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கூறியும் நிறுத்தாது சென்ற மோட்டார் சைக்கிள் மீது 2016 ஒக்டோபர் மாதம் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் குறித்து பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்துகின்றனர். சம்பவம் இடம்பெற்று மறுநாள் அதனுடன் தொடர்புபட்ட ஐந்து பொலிஸ் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர். பதினொரு மாத தடுப்புக் காவலின் பின்னர் மார்ச் மாதம் அந்தப் பொலிஸ் அதிகாரிகள் சேவையில் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டனர். ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் மூவரை இந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்ததுடன், இருவருக்கு எதிராக புதிய குற்றச்சாட்டுக்களைப் பதிவுசெய்தது.

முன்னணி பத்திரிகையாளரும், அரசியல்வாதியுமான சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க 2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டமை குறித்த விசாரணைகள் இன்னமும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. பெப்ரவரியில் முன்னர் உயர் பதவியிலிருந்த ஐந்து பாதுகாப்பு அதிகாரிகளை கல்கிஸ்சை பொலிஸிலிருந்து பொலிஸார் கைதுசெய்தனர். பிரதி இன்ஸ்பெக்டர் மற்றும் பொறுப்பான அதிகாரி ஆகியோரும் இதில் உள்ளடங்குகின்றனர். இந்த அதிகாரிகள் ஜுலை 17ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதுடன், இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், விசாரணைகள் தொடர்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை தொடர்பில் குற்றச்சாட்டப்பட்டு பின்னர் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்ட 5 சந்தேநபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் மேன்முறையீடு செய்துள்ளார். இந்த வழக்குத் தொடர்பான புதிய விசாரணை 2019 ஜனவரியில் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறது.

**ஆ. காணாமல் போதல்கள்**

யுத்தம் நடைபெற்ற சமயம் மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற காணாமல்போன சம்பவங்கள் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளன. காணாமல்போதல்கள் குறித்த 5,859 வழக்குகள் அல்லது முறைப்பாடுகள் நிலுவையில் உள்ளதாக 2017 ஜுலை மாதம் வெளியிடப்பட்ட பலவந்தமான அல்லது விருப்பத்துக்கு முரணான காணமல்போதல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெப்ரவரி 28ஆம் திகதி காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு அரசாங்கம் ஏழு ஆணையாளர்களை நியமித்தது. இந்த அலுவலகம் காணாமல்போனவர்களின் குடும்பங்கள் மற்றும் உறவினர்களை மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் சந்தித்திருந்தனர். ஓகஸ்ட் மாதம் இடைக்கால அறிக்கையொன்றை அந்த அலுவலகம் வெளியிட்டிருந்ததுடன், இதில் இடைக்கால நிவாரணம் மற்றும் காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு சட்டரீதியான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன. வருடம் முடியும்போது 1983ஆம் ஆண்டிலிருந்து காணாமல்போன ஏறத்தாழ 20,000 பெயர்களை அந்த அலுவலகம் இறுதிப்படுத்தியுள்ளது.

2010ஆம் ஆண்டு காணாமல்போன லங்கா ஈ நியூசின் ஊடகவியலாளரும், கார்ட்டீன் கலைஞருமான பிரகீத் எக்னலினொட தொடர்பில் எந்தவொரு சந்தேகநபருக்கு எதிராகவும் அதிகாரிகள் குற்றச்சாட்டுக்களைத் தாக்கல்செய்யவில்லை.

**இ. சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது மோசமான நடத்துதல்கள் அல்லது தண்டனைகள்**

இதுபோன்ற நடைமுறைகள் அரசியலமைப்பு மற்றும் சட்டத்தினால் தடுக்கப்பட்டுள்ளபோதும், அதிகாரிகள் தொடர்ந்தும் அதனைச் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. சித்திரவதைப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றம் என்பதுடன், ஏழு வருடங்களுக்குக்கு குறையாத, பத்து வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையை வழங்கக் கூடிய குற்றம் என சட்டம் குறிப்பிடுகிறது. சித்திரவதைகளிலிருந்து தடுப்பதற்காக அரசாங்கத்தினால் பேணப்படும் குழுவானது குற்றஞ்சாட்டப்படும் இடங்களுக்கு விஜயம் செய்து, சாட்சிகளை ஆராய்ந்து, சித்திரவதை குற்றச்சாட்டுக்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறது. குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுவதற்காக பொலிஸார் சிவிலியன்களை சித்திரவதைக்கு உட்படுத்துவதாகவும், பாலியல் ரீதியில் துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. பயங்கரவாத தடுப்புச் சட்டமானது குற்றஞ்சுமத்தப்பட்ட ஒருவரிடமிருந்து எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ளப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றம் ஒரு சாட்சியாகப் பெற்றுக்கொள்ள இடமளிப்பதுடன், சித்திரவதை தொடர்பில் இது விதிவிலக்காக அமையவில்லை. இந்தச் சட்டத்தின் பல்வேறு சரத்துக்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கரிசனைகளைக் கருத்தில் கொண்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்வதை அரசாங்கம் இடைநிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்ததுடன், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ ஆகக் குறைந்தது நான்கு கைதுகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 70 முதல் 130 வரையானவர்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிஸ் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் வழமைபோல நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், அரசாங்கத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட உடல்ரீதியான மற்றும் உளரீதியான சித்திரவதைகள் குறித்து ஜுன் மாதம் வரையில் 193 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறுகிறது. சந்தேகநபர்களிடமிருந்து வாக்குமூலத்தைப் பெறுவதற்கு அல்லது சாட்சியங்களைப் பெறுவதற்காக பொலிஸார் அவர்களை சித்திரவதைக்கு உட்படுத்துவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் ஆண்டு முழுவதும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறுவதாக நேர்காணல்களை மேற்கொண்ட மனித உரிமை அமைப்புக்கள் கண்டறிந்துள்ளன. 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் வரை கைதுசெய்யப்பட்டவர்கள் உள்ளடங்கலாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் சித்திரவதை, தவறான நடத்தைகள், பலவந்தமான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதுடன், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளை நாடுவதற்கான அடிப்படை உரிமை மறுக்கப்படல் போன்றவற்றுக்கு முகங்கொடுத்துள்ளனர். புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பிழையாக நடத்தப்பட்டிருப்பதுடன், சித்திரவதைகளுக்கும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். புனர்வாழ்வளிப்பின்போதும், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னரும் இவ்வாறான நிலைமைகளுக்கு அவர்கள் முகங்கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது. சிவிலியன்களுக்கு

எதிராக பொலிஸாராலும், பாதுகாப்பு அதிகாரிகளாலும் அதிகளவான பலம் பிரயோகிக்கப்படுகின்றமை குறித்த கவலைகளும் உள்ளன.

காணாமல்போன கணவன்மார் பற்றிய தகவல்களைப் பெறச்செல்லும் மனைவிமார் அல்லது பாதுகாப்புப் படையில் பணியாற்றி உயிரிழந்தமைக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளைப் பெறச்செல்லும் விதவைப் பெண்கள் அரசாங்க மற்றும் பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகளால பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் உள்ளன.

**சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களின் நிலைமைகள்**

பழமைவாய்ந்த உட்கட்டமைப்பு, அதிக சனநெருக்கடி மற்றும் குறைந்த சுகாதார வசதிகள் காரணமாக சிறைச்சாலைகளின் நிலைமைகள் மோசமாகவுள்ளன.

<u>பௌதீக நிலைமைகள்</u> : சனநெருக்கம் முக்கிய பிரச்சினையாகவுள்ளது. சிறைச்சாலைகளில் இருக்கவேண்டிய சனத்தொகையானது சராசரியான அளவைவிட 64 வீதம் அதிகரித்திருப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் எதிர்வுகூறியுள்ளார். சில சமயங்களில் அதிகாரிகள் இளையவர்களையும், வயதானவர்களையும் ஒன்றாகத் தடுத்துவைக்கின்றனர். பெரும்பாலான சிறைக்கைதிகள் சீமெந்து தரையிலேயே படுத்துறங்குவதுடன், அவர்களுக்கு இயற்கை ஒளி அல்லது காற்றோட்டம் மிகவும் குறைவாகவே கிடைக்கிறது.
நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் 74 பேர் சிறையில் இருக்கும்போது உயிரிழந்திருப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார் இவற்றில் பெரும்பாலானவை இயற்கை மரணங்கள் என்பதுடன் மூன்று தற்கொலைச் சம்பவங்களும் உள்ளடங்குகின்றன.

ஜுலை மாதம் வரையில் 52 பேர் சிறையில் இருக்கும்போது உயிரிழந்திருப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் கூறினார். இவற்றில் பெரும்பாலானவை இயற்கை மரணங்கள் என்பதுடன் மூன்று தற்கொலைச் சம்பவங்களும் உள்ளடங்குகின்றன.

சில பாரிய சிறைச்சாலைகள் தனியான மருத்துவமனைகளைக் கொண்டிருப்பதுடன், பெரும்பலான சிறைச்சாலைகளில் மருத்துவ அதிகாரிகளுடன் மருத்துவப் பிரிவுகளே காணப்படுகின்றன. மருத்துவ சேவை தேவைப்படும் கைதிகளை சிறிய சிறைச்சாலை அதிகாரிகள் அருகிலுள்ள உள்ளூர் மருத்துவமனைக்கு அனுப்புகின்றனர்.

ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவைச் சேர்ந்த ஏறத்தாள 20 பெண் கைதிகள் தமது வழக்குகளைத் துரிதப்படுத்துமாறு கோரியும், குடும்ப உறுப்பினர்கள் தமக்காகக் கொண்டுவரும் உணவுகளுக்கு காணப்படும் வரையறைகளை நிவர்த்திசெய்யுமாறு வலியுறுத்தியும் கூரையின்மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் கைதிகளுக்கு வெளியிலிருந்து கொண்டுசெல்லப்படும் உணவைக் கட்டுப்படுத்துவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைக்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவர்கள் முன்வைத்த விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அதிகாரிகள் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய ஓகஸ்ட் 14ஆம் திகதி போராட்டம் அமைதியான முறையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

<u>நிர்வாகம்</u> : இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவை ஆற்றுப்படுத்தப்படும். சிறைச்சாலைகளில் தவறாக நடத்தப்படுவது தொடர்பில் சிறைக்கைதிகளிடமிருந்து குற்றச்சாட்டுக்கள் கிடைத்திருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு

தெரிவிக்கின்றபோதும், அவ்வாறான முறைப்பாடுகள் எதுவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கு அனுப்பப்படவில்லை.

<u>சுதந்திரமான கண்காணிப்பு</u> : முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு மேலதிகமாக சிறைச்சாலைகளுக்கு விஜயம் செய்யும் உள்ளூர் அமைப்பாக சிறைச்சாலை விருந்தினர்களுக்கான சபை காணப்படுகிறது. இது தடுப்புக்களில் கைதிகளுக்கான சூழல்களை பரிசீலித்தல் மற்றும் கைதிகளின் முறைப்பாடுகள் பற்றி சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரி மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளருடன் கலந்துரையாட இதற்கு சட்டரீதியான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை விருந்தினர்களுக்கான சபை அரசாங்கத்தின் உள்ளக கண்காணிப்பு அமைப்பாக செயற்படுவதுடன், இது சிறைச்சாலைகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இதன் உறுப்பினர்கள் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளாக அல்லது அரசாங்கத்துடன் தொடர்புபடாதவர்களாக அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களைச் சாராதவர்களாக இருப்பர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன சிறைச்சாலைகளின் நிலைமைகளை கண்காணிப்பதற்கான ஆணையைப் பெற்றுள்ளன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த வருடத்தல் சிறைச்சாலைகள் தொடர்பில் தேசிய ஆய்வொன்றை நடத்தியிருப்பதுடன், நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளுக்கு 20 தடவைகள் விஜயம் செய்தள்ளது. வருட இறுதியில் இந்த ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கவில்லை.

<u>முன்னேற்றங்கள்</u> : சிறைச்சாலைகளில் காணப்படும் அதிகரித்துள்ள சனநெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் சிறைச்சாலைகள் திணைக்களம், சிறைச்சாலைகளை நகரப் பகுதிகளிலிருந்து கிராமியப் பகுதிகளுக்கு மாற்றிவருகிறது. வருடத்தில் அரசாங்கம் சமூக சீர்திருத்த திட்டத்தை நடைமுறைப்படுத்தியதுடன், இதன் மூலும் நீண்டகால நம்பிக்கையின் அடிப்படையில் சிறைக்கைதிகள் புனர்வுவாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

### ஈ. ஒருதலைப்பட்சமான கைதுகள் அல்லது தடுத்துவைத்தல்கள்

ஒருதலைப்பட்சமான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல்களை சட்டம் தடுப்பதுடன், கைதுசெய்யப்படும் நபர் தனது கைதுக்கான சட்டரீதியான நியாயத்தை நீதிமன்றத்தில் நாடுவதற்கும் சட்டம் இடமளிக்கிறது. ஒருதலைப்பட்சமான கைதுகள் மற்றும் தடுத்துவைப்புக்கள் குறைந்துள்ளபோதும் இவ்வாறான கைதுகள் தொடர்ந்து வருவதாக தகவல்கள் காணப்படுகின்றன. சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவல்களுக்கு அமைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ்வாறான கைதுகள் மற்றும் தடுத்துவைப்புக்களை சவாலுக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகிறது.

### பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைப்பின் பங்கு

பொலிஸ் சேவை உள்ளூர் பாதுகாப்பைப் பேணுவதை கடமையாகக் கொண்டது, இது நவம்பர் மாதம் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழிருந்து பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாற்றப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள இராணுவம் வெளிப்பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ளது. விசேடமான உள்ளூர் பாதுகாப்பு சூழ்நிலைகளை கையாழ்வதற்காக இராணுவத்தினரை அழைப்பதற்கான அனுமதி குற்றவியல் சட்டக் கோவையினூடாக வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சிறிசேன பாதுகாப்பு அமைச்சராக கடமையாற்றுகின்றபோதும், சிவில் அதிகாரியான பாதுகாப்புச் செயலாளர் இராணுவத்தின் நாளாந்த செயற்பாடுகள் நவம்பரிலிருந்து பொலிஸாரின் செயற்பாடுகளுக்கான பணிப்புரைகளை வழங்குவார். பொலிஸ்மா அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் துணை

இராணுவ விசேட அதிபடிப்படையைச் சேர்ந்த 11,000 பேரும் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் உள்ளனர். இராணுவத்தினருடன் இணைந்து உள்ளூர் பாதுகாப்புக்கான செயற்பாடுகளை இவர்கள் ஒருங்கிணைப்பாளர்கள்.

சிவில் அதிகாரிகள் பொதுவாகப் பாதுகாப்புப் படைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டிருப்பர். மார்ச் மாதம் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளின்போது குற்றமிழைத்தவர்கள் முஸ்லிம்களின் கட்டடங்களைக்கு சேதமிழைப்பதை, முஸ்லிம்களைத் தாக்குவதைத் தடுக்கும விடயத்தில் பொலிஸார் ஆரம்பத்தில் மந்த கதியிலேயே செயற்பட்டனர். பாதுகாப்புப் படையினரின் படுகொலைகள் நியாயப்படுத்தக்கூடியவையா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சுக்குரியது. இராணுவப் புலனாய்வாளர்கள் உள்நாட்டு கண்காணிப்புக்களை மேற்கொள்வதுடன், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளை தொந்தரவுக்கு உட்படுத்தும் அல்லது அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்வதாக சிவில் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. (2.அ பகுதியில் உள்ள ஊடகம் உள்ளடங்கலான வெளிப்பாட்டு சுதந்திரத்தைப் பார்க்கவும்)

யுத்தகாலத்தில் தண்டனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்பதால் துஷ்பிரயோகங்கள் நீடித்தன. பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்குவைத்து படுகொலை செய்ததாக குற்றச்சாட்டுக்கள் காணப்படுவதுடன், ஊடகவியலாளர்கள் மற்றும் தனிநபர்களை இலக்குவைத்து கடத்தியமை மற்றும் படுகொலை செய்தல் என்பவற்றில் துணை இராணுவத்தினர், பொலிஸ் மற்றும் ஏனைய பாதுகாப்புத் தரப்பினர் தொடர்புபட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கமும், நீதிமன்றங்களும் பெருமளவில் தயக்கம் காட்டுவதாக சிவில் சமூக அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது மிகவும் குறைவானதாக இருக்கின்றபோதும், அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் தவறான செயற்பாடுகளுக்கு எதிரான வழக்குகள் அதிகரித்துள்ளன.

துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரிப்பதற்கு பாதுகாப்புப் படையினர் வரையறுக்கப்பட்ட உள்ளக விசாரணை பொறிமுறைகளைக் கொண்டிருப்பதுடன், பாதிக்கப்பட்டவர்கள் வழக்குகளை உச்சநீதிமன்றத்துக்கு நேரடியாகக் கொண்டுசெல்லலாம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அவ்வாறான துஷ்பிரயோகங்களை விசாரணை செய்ய முடியும் என்பதுடன், அரசாங்கம் வழக்குகளைத் தொடர்ந்துள்ளபோதும் உயர்பாதுகாப்புசேவை உறுப்பினர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. 1998ஆம் ஆண்டு தமது கட்டுப்பாட்டின் கீழிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ) உறுப்பினரைக் கொன்றமைக்காக இரண்டு சிரேஷ்ட இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு ஓகஸ்ட் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது. தாக்குதல் நடத்தியதாக குற்றஞ்சா்டடப்பட்ட வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கமல் அமரசிங்கவுக்கு ஜுலை 18ஆம் திகதி உச்சநீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை வழங்கியிருந்தது. 2014ஆம் ஆண்டு தான் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறி அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்த பாலியல் தொழிலாளிக்கு நஷ்ட வழங்குமாறு பொலிஸாருக்கு எதிராக உச்சநீதிமன்றம் ஜுலை 5ஆம் திகதி திருப்பு வழங்கியது. 2003ஆம் ஆண்டு பம்பலப்பிட்டிய பகுதியில் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் நிரூபிக்கப்பட்ட இரண்டு பொலிஸாருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனையுடன், 20 வருட சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் ஜுன் 7ஆம் திகதி வழங்கியது. இலங்கையில் நடைபெற்ற சிவில் யுத்தத்தில் அட்டூழியங்களில் ஈடுபட்ட இராணுவப் பிரிவில் தொடர்புகளை வைத்திருந்தார் எனக் கிடைத்த தகவல்களையடத்து மாலியில் அமைதிகாக்கும் படையில் பணியாற்றிய இலங்கை கொமாண்டரை ஐக்கிய நாடுகள் சபை ஒக்டோபர் மாதம் நாட்டுக்கு மீளத்திருப்பியனுப்பியது.

மத்திய பௌத்த பிராந்தியமான கண்டி மாவட்டத்தில் மார்ச் மாதம் முஸ்லிகளுக்கு எதிராக பரந்துபட்ட வன்முறைகள் வெடித்தன. இதனால் நூற்றுக் கணக்கான முஸ்லிம்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசயல்கள் அழிக்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன. நான்கு பேர் உயிரிழந்ததற்கு மேலதிகமாக 28 பேர் காயமடைந்தனர். பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் வன்முறைகளைக் கட்டுப்படுத்த எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென கண்காணிப்பாளர்களும் பாதிக்கப்பட்டவர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

### கைது நடைமுறை மற்றும் தடுப்பில் உள்ளவர்களை நடத்துதல்

ஆட்கொலை, திருட்டு, கொள்ளை மற்றும் கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்கு பிடியாணையின்றி பொலிஸார் கைதுகளை மேற்கொள்ள குற்றவியல் சட்டக்கோவை இடமளிக்கிறது. மாறாக பொலிஸார் சாட்சிகளின் அடிப்படையாகக் கொண்டு நீதிபதிகள் மற்றும் மஜிஸ்திரேட்களின் இணக்கப்பாட்டுடன் பிடியாணையைப் பிறப்பிக்கச் செய்ய முடியும். கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவரின் கைதுக்கான காரணம் மற்றும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டை அதிகாரிகள் கூறவேண்டும் என சட்டம் வலியுறுத்துவதுடன், சிறிய குற்றங்களாயின் 24 மணித்தியாலத்திலும், பாரிய குற்றச்சாட்டுக்களாயின் 48 மணித்தியாலத்திலும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றமாயின் 72 மணித்தியாலங்களிலும் மஜிஸ்திரேட் முன்னிலையில் நிறுத்தவேண்டும். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளில் தடுப்பில் உள்ளவர்கள் உரிய காலம் கடந்த பின்னரே நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகின்றனர். பிணையில் விடுவிக்கப்படக் கூடிய குற்றங்கள் பிணை சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டுவதற்குப் பதிலாக குறிப்பிட்ட திகதியில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு எழுத்துமூல ஒப்புதலைப் பெற்றுக் கொண்டு சந்தேகநபர்களை 24 மணித்தியால தடுப்பின் பின்னர் பொலிஸார் விடுவிக்க முடியும். பிணையில் விடுவிக்கப்படக் கூடிய குற்றங்கள் தொடர்பில் மஜிஸ்திரேட் அனுமதி பெற முன்னர் சந்தேகநபரை பொலிஸார் விடுதலை செய்ய முடியும். எனினும், பிணை வழங்கமுடியாத குற்றங்கள் தொடர்பான சந்தேகநபர்கள் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட பின்னரே தீர்மானிக்க முடியும். மஜிஸ்திரேட் நீதிமன்றம் ஆஜரான பின்னரே பிணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

எந்தவொரு நபரும் தண்டனை வழங்கப்படுவதற்கு அல்லது விசேட விலக்களிப்பு சிறைக்கு அனுப்பப்பட முன்னர் 12 மாதங்களுக்கு மேலாக தடுப்புக் காவலில் வைத்திருக்க முடியாது என பிணை சட்டம் கூறுகிறது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் எந்தவித குற்றச்சாட்டும் இன்றி ஒருவர் 18 மாதங்கள் தடுத்துவைக்கப்பட முடியும். எனினும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை அதிகாரிகள் நீண்டகாலமாகத் தடுத்துவைப்பதே நடைமுறையாகவுள்ளது. வழக்குகளுக்கு முன்னர் தடுத்துவைக்கப்பட்டுள்ள 81 பேர் பொலிஸாரின் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களம் குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்வதற்காக காத்திருப்பதாக பயங்கராத குற்றச்சாட்டின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் பாதுகாப்புத் தொடர்பான ஐ.நாவின் விசேட பிரதிநிதியின் 2017ஆம் ஆண்டு ஜுலை மாத விஜயத்தின் பின்னர் ஐ.நா வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 70 பேர் ஐந்து வருடங்கள் எந்தவித வழக்கு விசாரணைகளும் இன்றி தடுத்துவைக்கப்பட்டிருப்பதுடன், 12 பேர் பத்து வருடங்களாக எந்த வழக்கு விசாரணைகளும் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வருடத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்ட நபர் ஒருவரை பிணையில் விடுவிப்பதாயின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியை நீதிபதி கோருவார், எனினும் பொதுவாக அனுமதி வழங்கப்படுவதில்லை. படுகொலை

வழக்குகளில் மஜிஸ்திரேட் சந்தேகநபரை தடுப்புக்காவலில் வைக்கமுடியும், மேல் நீதிமன்றமே அவருக்கு பிணைவழங்க முடியும். எல்லா வழக்குகளிலும் சந்தேகநபர் சட்ட பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். இருந்தபோதும் பொலிஸ் நிலையம் மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்போது சட்ட பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை தொடர்பில் எந்தவிசேட ஏற்பாடுகளும் இல்லை. மேல் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் உள்ள குற்றவியல் வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஏழை குற்றாவாளிளுக்கு அரசாங்கம் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுக்கின்றபோதும், எனைய வழக்குகளுக்கு வழங்கப்படுவதில்லை. மேல் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளுக்கே சட்டஆலோசனை வழங்க சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் இடைநிறுத்தப்படும் என சட்டத்துறை அமைச்சர் 2017ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஏற்றுக் கொண்டபோதும், இந்த வருடத்தில் அரசாங்கம் மேலும் நால்வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்துள்ளது.

<u>தன்னிச்சையான கைது</u> : ஜுன் மாதம் வரையில் தன்னிச்சையான கைது மற்றும் தடுத்துவைத்தல் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 101 முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது. பொலிஸார் சில சமயங்களில் தனிநபர்களை தனிக்காவலில் வைப்பதுடன், சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரர்களை சந்திப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன், பொலிஸாருடன் அடிக்கடி சந்திப்பை மேற்கொள்ள வேண்டும். இது போன்ற சட்டத்துக்கு அப்பாற்பட்ட தடுத்துவைப்புக்கள் பிழையான நடத்துகை மற்றும் சித்திரவதைகளுக்கு வழிவகுக்கின்றன.

முன்னாள் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் உட்பட நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் ஒக்டோபர் மாதத்தில் உண்ணாவிரதப்போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். ஒருதலைப்பட்சமான தமது கைதுகள் மற்றும் தடுப்புக்கு தீர்வொன்றை வழங்க வலியுறுத்தியே அவர்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்தனர். பெரும்பலானவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு எதுவித குற்றச்சாட்டும் சுமத்தப்படாது தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தமக்கு எதிராக அரசாங்கம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

<u>விசாரணைக்கு முன்னரான தடுப்பு</u> : தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் அரைப்பகுதிக்கும் மேலானவர்கள் விசாரணைக்கு முன்னரான தடுப்பில் உள்ளவர்களாகும். விசாரணைக்கு முன்னரான தடுப்பு என்பது ஆகக் கூடியது 24 மணித்தியாலங்களாகும். எனினும் பிணை பெறமுடியாமை, நீளமான சட்ட நடைமுறை, வினைத்திறனற்ற நீதி மற்றும் ஊழல் என்பன வழக்கு விசாரணைகளை தாமதப்படுத்துகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களால் விசாரணைக்கு முன்னரான தடுப்பு 24 மணித்தியாலங்களை தாண்டுவதுடன், விசாரணைக்கு முன்னரான காலத்துக்கு சமமாக அல்லது தண்டனைக்குரிய காலத்தை தாண்டுவதாகவும் அது அமையும் என சட்ட ஆலோசனைக் குழுக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

<u>தடுப்பில் உள்ள ஒருவர் தம்மை தடுத்து வைத்திருப்பதற்கான சட்டபூர்வத் தன்மையை சவாலுக்கு உட்படுத்தக் கூடிய இயலுமை</u> : சட்டத்தின் கீழ் ஒரு நபர் கைது செய்யப்படுவது அல்லது தடுத்துவைக்கப்படுவதை சவாலுக்கு உட்படுத்த முடியும் என்பதுடன் நீதிமன்றத்தின் ஊடாக தன்னை விடுதலை செய்வதற்கான கோரிக்கையை முன்வைக்க முடியும். நீதிச் செயற்பாடுகள் பல வருடங்கள் தொடரும். நீதி சுதந்திரம் இன்மை மற்றும் ஆகக் குறைவான நஷ்டஈடுகள் போன்ற காரணங்களால் மக்கள் சட்டரீதியான நிவாரணங்களைப் பெறுவதில் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லையென மனித உரிமை அபிவிருத்திக்கான நிலையம் சுட்டிக்காட்டுகிறது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இதனை சவாலுக்கு உட்படுத்துவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**உ. நியாயமான பொது விசாரணை மறுக்கப்படல்**

சுதந்திரமான நீதித்துறை மற்றும் அரசாங்கம் நீதித்துறையின் சுயாதீனத்துக்கும், பக்கச்சார்பின்மைக்கும் அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும் என சட்டம் கூறுகிறது.

**வழக்கு விசாரணை நடைமுறை**

நீதியான மற்றும் பொதுவான வழங்கு விசாரணைக்கான உரிமையை அரசியலமைப்பும் சட்டமும் வலியுறுத்துவதுடன், சுயாதீனமான நீதித்துறை இந்த உரிமையை உறுதிப்படுத்தவேண்டும். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்வரை ஒருவர் நிரபராதி என சட்டம் கருதுகிறது. சகல குற்றவியல் விசாரணைகளும் பகிரங்கமாக நடத்தப்பட வேண்டும். பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் என்ன என்பதை அதிகாரிகள் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதுடன், அவர்கள் அது குறித்துக் கலந்துரையாடுவதற்கும் மேன்முறையீடு செய்வதற்கும் உரித்துடையவர்களாவர். குற்றவியல் குற்றஞ்சாட்டப்பட்ட ஏழைகளுக்கு மேல்நீதிமன்றத்தில் அரசாங்கம் சட்டஆலோசகர்களை வழங்கும். பிரதிவாதிகள் தமக்கு எதிரான சாட்சிகளை எதிர்கொள்வதுடன், தமக்கான சாட்சிகளை முன்வைப்பதற்கு உரிமை உடையவர்கள்.

நீதிமன்ற செயற்பாடுகள் மற்றும் ஏனைய சட்டம் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகியமொழிகளில் இருக்க வேண்டும் என சட்டம் கோருகிறது. வடக்கு மற்றும் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகள் மற்றும் செயற்பாடுகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் முன்னெடுக்கப்படுகின்றன. நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட உரைபெயர்பாளர்களுக்கு காணப்படும் குறைபாட்டினால் தமிழ்மொழி பேசும் பிரதிவாதிகள் தேவையான சந்தர்ப்பத்தில் இலவசமாக உரைபெயர்ப்பாளர்களைப் பெற்றுக் கொள்வதில் வரையறுக்கப்பட்டட உரிமையே காணப்படுகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றவியல் வழக்குகளை நீதிமன்றங்கள் தமிழ் பேசும் வடக்கு, கிழக்கில் சிங்களம் பேசும் பகுதிகளில் நடத்தியுள்ளன. மொழிப்பிரச்சினை காரணமாக சாட்சியங்கள் உள்ளிட்டவற்றை நிறுவத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. மிகவும் குறைந்தளவான சட்டப் புத்தகங்களே தமிழ் மொழியில் உள்ளன. பிரதிவாதிகள் வழக்கு விசாரணைகளின் போது நீதிமன்றத்தில் ஆஜராவதற்கான உரிமை காணப்படுவதுடன், அதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்குப் போதிய காலம் வழங்கப்படுவதும் உரிமையாகும். பிரதிவதிவாதிகள் சாட்சியாக நிறுத்தப்படுவதற்கோ அல்லது குற்றத்தை ஒப்புக் கொள்வதற்கோ உரிமையைக் கொண்டவர்கள்.

**அரசியல் கைதிகள் மற்றும் தடுப்புக்காவலில் உள்ளவர்கள்**

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் முன்னாள் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களை அரசியல் கைதிகள் என சில தமிழ் அரசியல்வாதிகளும் உள்ளூர் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் அடையாளப்படுத்துகின்றனர். அவ்வாறான 130 சிறைக்கைதிகள் இன்னமும் இருப்பதாக மனித உரிமை அபிவிருத்திக்கான நிலையம் தெரிவித்துள்ளது. எனினும் இவர்கள் அரசியல் கைதிகள் என்பதை அரசாங்கம் ஏற்கவில்லை என்பதுடன், குற்றவியல் செயற்பாட்டுக்காக அவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது. மனித உரிமைகள் ஆணைக்குழு, மஜிஸ்திரேட் மற்றும் சிறைச்சாலைகள் நலன்புரி சங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன சிறைச்சாலைகளின் நிலைமைகளைக் கண்காணிப்பதற்கு அதிகாரிகள் வரையறுக்கப்பட்ட அனுமதியையே வழங்குகின்றனர். உள்ளூர் சட்ட ஆலோசனைகளைப் பெற ஒழுங்கற்ற வழியையே வழங்குகிறது.

**சிவில் நீதித்துறை நடைமுறைகள் மற்றும் தீர்வுகள்**

பிரஜைகள் மனித உரிமை மீறல் எனச்சொல்லப்படும் விடயம் தொடர்பில் நீதிமன்றத்தில் சிவில் பரிகாரங்களைக் கோரமுடியும்.

**சொத்து மீட்டளிப்பு**

முன்னர் யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் தனிநபர்களுக்கிடையிலும், அரசாங்கம் மற்றும் பிரஜைகளுக்கும் இடையிலும் காணி உரிமை தொடர்பில் பிணக்குகள் தொடர்கின்றன. யுத்தகாலத்தில் இராணுவ முகாம்களைச் சுற்றி பாதுகாப்பு வலயங்களை அமைப்பதற்கும், உயர்பாதுகாப்பு வலயங்களை அமைப்பதற்காகவும் கணிசமான காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தினர். 1950ஆம் ஆண்டு காணி கையகப்படுத்தல சட்டத்தின் கீழ் பொதுத் தேவைகளுக்காக அரசாங்கம் தனியார் காணிகளை கையகப்படுத்த முடியும், எனினும் உரிய கையகப்படுத்தல் தொடர்பில் போதிய முன்னறிவித்தல்கள் வழங்கி, அதற்கான நஷ்டஈடுகள் வழங்கப்பட வேண்டும் என சட்டம் கோருகிறது. முன்னைய அரசாங்கம் உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள காணிகளின் கையகப்படுத்தல் குறித்த அறிவித்தல்களை காணி உரிமையாளர்கள் செல்ல முடியாத பகுதிகளில் காட்சிப்படுத்தியிருந்தது. பலர் நீதிமன்றத்தை நாடியதுடன், காணி கையகப்படுத்தல்களுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனுக்களையும் தாக்கல் செய்தனர். பெரும்பாலான காணிகள் இராணுவ முகாம்களையும், தளங்களையும் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படுவதாக கையகப்படுத்தல் அறிவிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. அவற்றில் சில அறிவிப்புக்கள் ஹோட்டல், தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கானவையாகவும் காணப்படுகின்றன. வருடம்முழுவதிலும் குறிப்பாக 2016ஆம் ஆண்டு உள்ளடங்கலாக காணி கையக்கப்படுத்தல்களுக்கு எதிராக உச்சநீதிமன்றம் மற்றும் மேல்நீதிமன்றங்களில் பல அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் ரிட் மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன. உயர் பாதுகாப்பு வலயங்கள் சட்டக் கட்டமைப்பைப் பின்பற்றவில்லை என்பதுடன், 2011 அவசரகால சட்டத்தை பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டவையாகும். இவ்வருடத்தில் அரசாங்கம் ஏறத்தாழ 2,300 ஏக்கர் காணிகளை விடுவித்துள்ளது. 2009ஆம் ஆண்டு முதல் ஏறத்தாள 83,000 ஏக்கர் காணிகளை அதாவது யுத்த காலத்தில் தம்வசப்படுத்தப்பட்ட காணிகளில் 80 வீதமானவற்றை விடுவித்திரப்பதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

உயர்பாதுகாப்பு வலயத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது காணிகளிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றும் செயற்பாடுகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுவதுடன், பெருளாதாரப் பெறுமதிமிக்க காணிகளை இராணுவத்தினர் தம்வசம் வைத்துள்ளனர். பௌத்த குருமார் புத்தர் சிலைலைய அல்லது அரசமரத்தை ஸ்தாபித்த பின்னர் தமது உடமைகள் என உத்தியோகபூர்வமாக உரிமை கோருவது கடினம் என சில இந்து மற்றும் முஸ்லிம் குழுக்கள் கூறுகின்றன.

**ஊ. அந்தரங்கம், குடும்பம், வீடு போன்றவற்றில் தன்னிச்சையான அல்லது சட்டவிரோதமான தலையீடுகள்**

அரசாங்க அதிகாரிகள் வீடுகளுக்குள் நுழைந்து அங்கு நடைபெறக்கூடிய தொடர்பாடல்களை எந்தவித சட்ட அனுமதியோ அல்லது அதிகாரமோ இல்லாமல் கண்காணிப்பதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் அனுமதியளிக்கிறது. உரிய அங்கீகாரம் இல்லாமல் தனிநபர்களின் நடமாட்டங்களை அரசாங்க அதிகாரிகள் தொடர்ச்சியாகவும் கண்காணிப்பதாகவும் முறையிடப்படுகிறது.

**பகுதி 2 சிவில் சுதந்திரத்துக்கு, இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:**

**அ. ஊடகங்கள் உள்ளடங்கலாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்**

ஊடகங்கள் உள்ளடங்கலாக கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டிருப்பதுடன், பொதுவாக அரசாங்கம் இதனை மதித்து வருகிறது. சுதந்திரமான ஊடகம், வினைத்திறனான நீதித்துறை, ஜனநாயக அரசியல் முறையின் செயற்பாடு என்பன ஒன்றிணைந்து ஊடகங்கள் உள்ளடங்கலாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை ஊக்குவிக்கும்.

<u>கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்</u> **:** மதத்தை அல்லது மத நம்பிக்கைகளை இழிவுபடுத்துவது உள்ளிட்ட வெறுக்கத்தக்க பேச்சுக்களை பொலிஸ் சட்டம் மற்றும் குற்றிவியல் சட்டங்களைப் பயன்படுத்தி அதிகாரிகள் கட்டுப்படுத்தியுள்ளனர். வெறுக்கத்தக்க பேச்சுக்களை தமது செய்திகள் மற்றும் தமது பிரிவுகளில் உள்ளடக்குவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு அசாங்கம் சகல ஊடகங்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

<u>பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திரம்</u> : சுதந்திர ஊடகங்கள் வினைத்திறனாக செயற்படுவதுடன், பரந்துபட்ட நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. எனினும் சிவில் யுத்தம் மற்றும் அதன் பின்னரான உணர்ச்சிபூர்வமான விடயங்களை அறிக்கையிடும்போது வடபகுதியில் பெரும்பான்மையாகவிருக்கும் தமிழ் ஊடகவியலாளர்கள் பாதுகாப்புத் தரப்பினரின் தொந்தரவுகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இராணுவ செயற்பாடுகள் தொடர்பில் அறிக்கையிடும்போது அவற்றுக்குரிய படங்களின் பிரதிகள், நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களின் பெயர்விபரங்கள், கட்டுரைகளின் மூலங்கள் என்பவற்றை வழங்குமாறு இராணுவத்தினர் கோரியுள்ளனர். தமிழர்களின் யுத்த நினைவுகள் அல்லது காணி கையகப்படுத்தல்களுக்கு எதிரான போராட்டங்கள் போன்ற உணர்ச்சிபூர்வமான நிகழ்வுகளை அறிக்கையிடுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு இராணுவத்தினர் தம்மை நேரடியாகக் கேட்டுக் கொண்டுள்ளதுடன், ஒத்துழைப்பு வழங்காவிட்டால் எதிர்விழைவுகளைச் சந்திக்க முடியும் என்ற அச்சம் ஊடகவியலாளர்களிடம் காணப்பட்டது.

சட்டத்துக்கு புரம்பானது என சவாலுக்கு உட்படுத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் நியமனத்தின் பின்னர் ஒக்டோபர் மாதம், ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் சிலர் அரசாங்க ஊடகங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொண்டனர். ஊடகவியலாளர்கள் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் தனது கவலையை வெளியிட்டிருந்ததுடன், ராஜபக்ஷவுக்கு ஆதரவான குண்டர்கள் அலுவலகங்களுக்குள் நுழைந்து, பணியாளர்களை அச்சுறுத்தியதுடன் அவர்களை பலவந்தமாக வெளியேறுமாறும் பணித்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது. மற்றுமொரு சம்பவத்தில் வெளியேற்றப்பட்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவான அமைச்சரின் மெய் பாதுகாவாலர் அரசாங்க நிறுவனமொன்றுக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், அதில் மஹிந்த ஆதரவாளர் ஒருவர் கொல்லப்பட்டார்.

<u>வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்கள்</u> : உணர்வுபூர்வமான நிகழ்வுகளை அறிக்கையிடச்செல்லும்போது ஊடகவியலாளர்கள் மிரட்டப்பட்ட, தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. தமிழ் கார்டியனின் ஊடகவியலாளர் உதயராசா ஷாலின் ஓகஸ்ட் மாதம் இந்துக் கோவில் நிகழ்வொன்றை அறிக்கையிட்டமை தொடர்பில் அவர் இலக்குவைக்கப்பட்டு முரண்பாடொன்று ஏற்பட்டமை தொடர்பில் எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

<u>தணிக்கை அல்லது உள்ளடக்கத்தின் மட்டுப்படுத்தல்கள்</u> : ஜனாதிபதி அல்லது அவருடைய குடும்பத்தினரை விமர்சிக்கும் விடயங்களில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பல தடவை சுய தணிக்கை செய்துள்ளன. முதல் குடும்பம் தொடர்பான

விடயங்களை அறிக்கையிடுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து தமக்கு நேரடியாக அழைப்புக்கள் கிடைத்திருப்பதாக ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர். ஜுன் 5ஆம் திகதி தெல்ஷான் என்ற தனியார் தொலைக்காட்சி வலையமைப்பை தொலைத்தொடர்புகள் கட்டுப்பாட்டு ஆணைக்குழு மூடியது. அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணத்தைச் செலுத்தவில்லையென அந்த அதிகாரசபை குற்றஞ்சாட்டியது. எனினும் அந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள குறித்த தொலைக்காட்சி நிறுவனம், அரசியல் நோக்கத்துக்காகவே தமது வலையமைப்பை மூடியிருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி சிறிசேனவின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊழல்களை வெளிப்படுத்தியமையைத் தொடர்ந்து லண்டனை தளமாகக் கொண்ட லங்கா ஈநியூ இணையத்தளம் 2017 நவம்பர் மாதம் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவினால் தடைசெய்யப்பட்டதுடன், வருட இறுதிவரை இது தடைசெய்யப்பட்டிருந்தது.

**இணைய சுதந்திரம்**

உரிய சட்டபூர்வமான அதிகாரி ஊடாக அரசாங்கம் தனியார் ஒன்லைன் தொடர்பாடல்களை கண்காணிப்பது தொடர்பில் நம்பகமான எந்த அறிக்கைகளும் இல்லை. ஆபாசமாகக் கருதப்படும் இணையத்தளங்களுக்கு அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட நுழைவுகளை வழங்கியுள்ளது. மத்திய மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்ததைத் தொடர்ந்து முகப்புத்தகம், வட்ஸ்அப் மற்றும் இன்ஸ்டோகிராம் போன்ற சமூக ஊடகத் தளங்களை அரசாங்கம் மார்ச் மாதத்தில் வாரத்துக்கு மேல் தடைசெய்தது.

சர்வதேச தொலைத்தொடர்புகள் சங்கத்தின் தகவல்களுக்கு அமைய 2017ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகையில் 34 வீதமானவர்கள் இணையத்தளத்தைப் பயன்படுத்துகின்றனர்.

**கல்வி மற்றும் கலாசார நிகழ்வுக்கான சுதந்திரம்**

அரசாங்கப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் அரசாங்கத்தின் அதிகாரிகளை விமர்சிப்பது தடுக்கப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இதுதவிரவும், கல்வி மற்றும் கலாசார நிகழ்வுகளுக்கான சுதந்திரத்தை அரசாங்கம் கட்டுப்படுத்தியதாக எந்த தகவல்களும் இல்லை.

**ஆ. அமைதியாக ஒன்று கூடுதல் மற்றும் ஒருங்கிணைவதற்கான சுதந்திரம்**

அமைதியான முறையில் ஒன்று கூடுதல் அல்லது ஒருங்கிணைவதற்கான சுதந்திரம் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளபோதும், மட்டப்படுத்தப்பட்ட அளவான சந்தர்ப்பங்களில் அரசாங்கம் இதனை கட்டுப்படுத்தியுள்ளது.

**அமைதியாக ஒன்று கூடுவதற்கான சுதந்திரம்**

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டிருப்பதுடன், பொதுவாக அரசாங்கம் இந்த உரிமையை மதித்துள்ளது. மதங்களுக்கிடையிலான ஒற்றுமை, தேசிய பாதுகாப்பு, பொது சட்டம் அல்லது பொது மக்களின் சுகாதாரம் அல்லது நீதிநெறி போன்றனபாதிக்கப்படும் வகையில் இடம்பெறக்கூடிய ஒன்றுகூடல்களை அரசியலமைப்பு மட்டுப்படுத்துகிறது. ஏனையவர்களின் சுதந்திரத்துக்கு மதிப்பளித்தல் அல்லது ஜனநாயக சமூகத்தின் பொது நலநன கருத்தில் கொண்டும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மட்டுப்படுத்தப்படலாம். பொலிஸ் சட்டத்தின் 77 (1) பிரிவின் கீழ் ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதாயின் உள்ளூர் பொலிஸிடம் அனுமதி பெறவேண்டும்.

**ஒருங்கிணைவதற்கான சுதந்திரம்**

ஒருங்கிணைவதற்கான சுதந்திரத்துக்கு சட்டம் இடமளித்துள்ளபோதும் இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபடும் அமைப்பு அல்ல தடைசெய்யப்பட்ட அமைப்புக்களைக் கூறலாம். சில கிறிஸ்தவ குழுக்கள் மற்றும் தேவாலயங்கள் தாம் அங்கீகாரம் இல்லாமல் ஒன்று கூடுகின்றனர் எனக் கூறி, மத செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருமாறு சில அதிகாரிகள் அழுத்தம் கொடுப்பதாக தெரிவித்துள்ளன. அரசாங்கத்தில் பதிவுசெய்யப்படவில்லையெனக் கூறி தடைவிதிப்பதற்கு அதிகாரிகள் முயற்சிப்பதாகவும் அந்த கிறிஸ்தவ குழுக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**இ.மதரீதியான சுதந்திரம்**

இராஜாங்கத் திணைக்களத்தின் ‘சர்வதேச மத சுதந்திர அறிக்கையை www.state.gov/religiousfreedomreport/ என்ற இணையத் தொடர்பில் பார்க்கவும்.

**ஈ.நடமாடும் சுதந்திரம்**

உள்நாட்டில் நடமாடுவது, வெளிநாட்டுப் பயணங்கள், குடிபெயர்வுகள், நாடுதிரும்புதல்கள் போன்றவற்றுக்கான சுதந்திரம் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டிருப்பதுடன், பொதுவாக இந்த உரிமைகளை அரசாங்கம் மதித்து வருகிறது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், அகதிகள், மீளத்திரும்பும் அகதிகள், நாடற்றவர்கள் மற்றும் கவனத்தில்கொள்ளவேண்டிய ஏனையவர்களை அகதிகளுக்கான ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மற்றும் ஏனையமனித நேய அமைப்புக்களுடன் இணைந்து பாதுகாப்பு வழங்குவதில் அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.

**உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள்**

2009ஆம் ஆண்டு முடிவடைந்த சிவில் யுத்தத்தினால் அரசாங்கம் மற்றும் எல்.ரி.ரி.ஈயினரால் மேற்கொள்ளப்பட்ட பலவந்தமாக இடப்பெயர்வுகள் உள்ளடங்கலாக பரந்துபட்ட, நீண்டகாலமான இடப்பெயர்வுகள் இடம்பெற்றன. ஜுன் மாதம் 30ஆம் திகதிவரை இன்னமும் 37,815 பேர் இடம்பெயர்ந்தோராக இருப்பதாக மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துசமயவிவகார அமைச்சு தகவல்கள் கூறுகின்றன. இதில் பெரும்பாலானவர்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ளனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு நடமாடுவதற்கு முழுமையான சுதந்திரம் காணப்படுகின்றபோதும், நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படாமை, உயர்பாதுகாப்பு வலயத்தினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், போதிய வேலைவாய்ப்பு இன்மை, பொதுச் சேவைகளை நாடுவதற்கான வசதிகள் இல்லாமை, காணி உரிமைப் பத்திரங்களை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் அவர்களின் நடமாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட் நிலையில் காணப்படுகின்றன. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் உள்ள நலன்புரி நிலையங்களில் தேவையான பாதுகாப்பு மற்றும் உதவிகளை அரசாங்கம் வழங்கவில்லை.

இராணுவ மயப்படுத்தப்பட்டிருந்த 840 ஏக்கர் காணிகளை விடுவித்தும், காணியற்றவர்களுக்கு அரசாங்கக் காணிகளை வழங்கியும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தமது இடங்களுக்குச் செல்வதையும் மீள்குடியேறுவதையும் அரசாங்கம் ஊக்குவித்துள்ளது. வீடுகளைக் கட்டிக்கொடுத்தல், பாடசாலைகள், மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்தல் மற்றும் ஏனைய சமூக சேகைளை வழங்குவதன் ஊடாக இராணுவத்தினரும், ஏனைய அரசாங்க முகவர் அமைப்புக்களும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றத்துக்கு உதவிசெய்துள்ளனர்.

**அகதிகளின் பாதுகாப்பு**

<u>புகலிடக்கோரிக்கைக்கான அணுகல் :</u> புகலிடக்கோரிக்கை அல்லது அகதி அந்தஸ்து வழங்க சட்டம் இடமளிக்கவில்லை. நாட்டில் உள்ள அகதிகளுக்கான உணவு, தங்குமிடம்

மற்றும் கல்வி என்பவற்றை வழங்குவதற்கும், மூன்றாவது நாட்டில் அவர்களை மீள்குடியேற்றுவதற்கும் அகதிகளுக்கான ஐ.நா ஆணையாளர் அலுவலகத்திலேயே அரசாங்கம் தங்கியுள்ளது. அகதிகள் அல்லது புகலிடக்கோரிக்கையாளர்கள் வேலைகளில் ஈடுபடவோ அல்லது அரசாங்க பாடசாலை முறைமையில் உள்வாங்கப்படுவதற்கோ சட்டம் இடமளிக்காதபோதும், பலர் உத்தியோகபூர்வமற்ற வகையில் பணியாற்றுகின்றனர்.

**பகுதி 3. அரசியல் செயற்பாட்டில் பங்கெடுப்பதற்கான சுதந்திரம்**

சகலருக்கும் சமமான வாக்குரிமை என்ற சர்வதேச தர அடிப்படையில் சுதந்திரமான தேர்தலில் இரகசியமான வாக்குச்சீட்டின் மூலம் தமக்கான அரசாங்கத்தைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பை அனைத்து பிரஜைகளுக்கும் அரசியலமைப்பு வழங்குகிறது.

**தேர்தல் மற்றும் அரசியல் பங்கெடுப்பு**

அண்மைய தேர்தல் : 2015ஆம் ஆண்டு ஜனவரி தேர்தலில் வாக்காளர்கள் தமது வாக்குரிமையை சுதந்திரமாகப் பயன்படுத்தியதுடன், வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் வெளிப்படையான முறையில் இடம்பெற்றதாக பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. பிரசாரங்களின் போது அரசாங்க சொத்துக்கள் துஸ்பிரயோகமான முறையில் பயன்படுத்தப்பட்டமை, அரசாங்க ஊடகங்கள் கடந்த அரசாங்கத்துக்கு பச்சாச்சார்பாகச் செயற்பட்டமை, எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பம் வழங்காமை போன்றவையும் கண்காணிப்பாளர்களால் அவதானிக்கப்பட்டிருந்தன.

2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பாராளுமன்றத் தேர்தலை அதிகாரிகள் மிகவும் குறைந்த வன்முறை சம்பவங்களுடன், நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்தியதாக உள்ளூர் மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஒன்றாக அறிவித்தன. ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு தனது ஆரம்பகட்ட கண்கணிப்பில், ''மிகவும் நிர்வகிக்கப்பட்ட, பரந்துபட்ட அரசியல் மாற்றுத் தெரிவுகளிலிருந்து நேர்மையான ஒரு தெரிவு வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், பிரசாரத்துக்கான நடைமுறைகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன'' என்று குறிப்பிட்டுள்ளது. ஒன்று கூடுவதற்கும் நடமாட்டத்துக்கும் காணப்பட்ட சுதந்திரத்தை அரசாங்கம் மதித்திருப்பதாக அக்குழு சுட்டிக்காட்டியிருந்தது. கட்டுப்படுத்தப்பட்ட பிரசார நடைமுறைகள் இருந்தபோதும் கட்சிகளும், வேட்பாளர்களும் அவற்றை மீறும் வகையில் செயற்பட்டிருந்தர். குறிப்பாக வீடு வீடாகச் சென்றுபிரசாரம் செய்வது, துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பது, தனிநபர்களாக பிரசாரம் செய்வது என்பன அனுமதிக்கப்படாதபோதும் அவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் பங்கெடுப்பு : அரசியல் செயற்பாடுகளில் பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் பங்கெடுப்பதற்கு சட்டத்தில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை என்பதுடன் அவர்கள் பங்கெடுக்கின்றனர். 2015ல் பாராளுமன்றத்துக்கான 225 உறுப்பினர்களில் 13 பெண் உறுப்பினர்கள் வாக்காளர்களால் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த வருடத்தில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் முதல் தடவையாக பெண்களின் பங்களிப்புக்கு வீகிதாசாரம் உள்ளடக்கப்பட்டது. உள்ளூராட்சி மற்றும் மாநகரசபைகளுக்கான ஆசனங்களில் 25 வீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது. இந்தப் புதிய விகிதாசாரத்தை அடைவதற்கு கட்சிகள் சிரமப்பட்டதுடன், இறுதியில் உள்ளூராட்சி மன்றங்களில் 22.8 வீதமான பெண்களின் பிரதிநிதித்துவத்தையே பெறமுடிந்தது.

**பகுதி 4. ஊழல் மற்றும் அரசாங்கத்தில் வெளிப்படைத் தன்மையின்மை**

ஊழலில் ஈடுபடு அதிகாரிகளுக்கு குற்றவியல் தண்டனை வழங்குவதற்கு சட்டம் இடமளிக்கிறது. எனினும் அரசாங்கம் இச்சட்டத்தை வினைத்திறனாக

நடைமுறைப்படுத்துவதில்லை, ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகள் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்கின்றனர். வருடத்தில் அரசாங்கத்தில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து முறையிடப்பட்டுள்ளன.

ஊழல் : ஊழல் என்பது தொடர்ந்தும் நீடிக்கும் பிரச்சினையாகவுள்ளது. உதாரணமாக 2017 டிசம்பரில் மத்திய வங்கி திறைசேரி முறி விற்பனை மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் நிதியமைச்சர் மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைத்தது. தற்போதைய அல்லது முன்னாள் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிரான ஊழல் விசாரணைகள் முடங்கிப்போயுள்ளன.

ஒக்டோபர் 26ஆம் திகதி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை விலக்கி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததாக ஜனாதிபதி சிறிசேன அறிவித்த பின்னர் நவம்பர் 16ஆம் திகதி வரை பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார். இக்காலப் பகுதியில் பாராளுமன்றம் மீண்டும் கூடும்போது தமக்கான பெரும்பான்மையை காண்பிப்பதற்கு ஆதரவுகளைப் பெற பணம் வழங்கப்பட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. ஒரு சந்தர்ப்பத்தில் தனது பக்கத்தை மாற்றி ராஜபக்ஷவை பிரதமராக ஆதரிப்பதற்கு தனக்கு 500 மில்லியன் ரூபாய்கள் (2.89 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) பேரம்பேசப்பட்டதாகத் தெரிவித்தார்.

நிதி வெளிப்படுத்தல்கள் : பாராளுமன்ற, உள்ளூராட்சி, மாகாணசபை மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பாராளுமன்ற சபாநாயகரிடம் அறிவிக்க வேண்டும் என சட்டம் கோருகிறது. இருந்தபோதும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் தமது நிதி அறிக்கைகளை சபாநாயகரிடம் கையளிக்கவில்லை என்பதுடன், அதிகாரிகள் இதனை வலியுறுத்தவுமில்லை. சட்டத்துக்கு அமைய கட்டணமொன்றை செலுத்தி தெரிவுசெய்யப்பட்டவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பொதுமக்கள் அறிந்துகொள்ள முடியும்.

## பகுதி 5. மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சர்வதேச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் விசாரணைகள் பற்றிய அரசாங்கத்தின் அணுகுமுறை

பொதுவாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இன்றி செயற்படும் உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமைக் குழுக்கள், மனித உரிமை வழக்குகள் குறித்து விசாரணைகளை நடத்தி தமது முடிவுகளை வெளியிட்டுள்ளன. அரசாங்க அதிகாரிகள் ஓரளவுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருப்பதுடன், தமது நிலைப்பாடுகளையும் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்கள் : ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நீதி, பொறுப்புக் கூறல் மற்றும் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் தொடர்ந்தும் பிரேரணைகளை நிறைவேற்றியுள்ளது. தற்போதைய பிரேரணை இலங்கையினால் இணை அனுசரணை வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 2015ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை 2019ஆம் ஆண்டுவரை நிறைவேற்றும்வரை ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பை பேணுவதாக இது அமைந்துள்ளது. 2015 மற்றும் 2017 பிரேரணைகளுக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியிருந்தாலும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் தொடர்ச்சியாக ஐ.நாவின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சிப்பதுடன், யுத்தகால தூஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு சர்வதேசத்தின் பங்களிப்புடனான குற்றவியல்நீதிப் பொறிமுறையொன்றுக்கு உறுதியளித்திருந்தாலும் போர் வீரர்களை பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் நிறுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லையெனத் தெரிவித்தனர்.

அரசாங்கத்தின் மனித உரிமை அமைப்பு : மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரிப்பதற்கான சட்டபூர்வ தன்மையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவே கொண்டுள்ளது. விசாரணைகளை நடத்துவது, விழிப்புணர்வூட்டுவது, கண்காணிப்பது மற்றும்

நிர்வாகம், நிதி போன்றவற்றைக் கையாழ்வது போன்ற ஐந்து செயற்பாடுகளைக் கொண்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளடக்கியுள்ளது. நாடு முழுவதிலும் 10 பிராந்திய அலுவலகங்கள் அமைந்துள்ளன. மனித உரிமைகள் ஆணைக்குழுபொது மக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும் அதேநேரம், தானாக முன்வந்தும் விசாரணைகளை மேற்கொள்ளும். ஆணைக்குழு திருப்தியடையும் வகையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமாயின் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நிதிரீதியான நஷ்டஈட்டைப் பரிந்துரைக்கும் அல்லது வழக்குத் தொடர்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அதனை ஆற்றுப்படுத்தும். சாட்சியங்கள் தொடர்பான கோரிக்கைகளை அரசாங்கம் பின்தொடராவிட்டால் அவ்வாறான செயற்பாடு தொடர்பில் அரசாங்கத்தின் சாட்சியை விசாரணைக்கு அழைக்க முடியும். அரசாங்கம் தமது கோரிக்கைக்கு உடன்படவில்லையெனில் மனித உரிமைகள் ஆணைக்குழு அது தொடர்பான வழக்கை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும் என்பதுடன், இதற்கு சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணம் அறவிடப்பட முடியும். சட்டத்துக்கு அமைய இலங்கை கடமையைச் செய்தமைக்காக எந்தவொரு நீதிமன்றத்தில் சாட்சியாக நிறுத்தவோ அல்லது மனித உரிமை ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவோ சட்டரீதியாக இயலாது. பொதுவாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுதந்திரமாகவும், அரசாங்கத்தின் குறைந்த தலையீட்டுடனும் செயற்படும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இலங்கையின் அமைதிகாக்கும் படையினர் தொடர்பில் கவனம் செலுத்தும் பொறுப்பைக் கொண்டவர்கள். ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சு ஆகியவற்றுக்கிடையில் அமைதி காக்கும் படையில் பங்குபற்றும் இலங்கை இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரைக் கண்காணிப்பது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தாலும் வருடம் முடியும்வரை இது இன்னமும் இறுதிப்படுத்தப்படவில்லை.

## பகுதி 6. வேற்றுமை, சமுதாய துஷ்பிரயோகம் மற்றும் ஆட்கடத்தல்கள்

### பெண்கள்

<u>கற்பழிப்பு மற்றும் குடும்ப வன்முறைகள்</u> : கற்பழிப்பு மற்றும் குடும்ப வன்முறைகளை சட்டம் தடுக்கின்றபோதும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பொருத்தமற்றதாகவுள்ளது. குற்றவியல் சட்டத்தின் 363ஆவது பிரிவானது கற்பழித்த ஆண் ஒருவரை வெளிப்படுத்த முடியாது எனக் கூறுகிறது. 365 ஆ (1) சரத்தானது பாரிய பாலியல் துஷ்பிரயோகத்தை பாலினம் சாதாது குற்றமாக அறிவிக்கிறது. கற்பழிப்புக்கான தண்டனையாக ஏழு வருடங்கள் முதல் 20 வருட சிறைத்தண்டனை மற்றும் ஆகக் குறைந்தது இரண்டு இலட்சம் ரூபா (1,160 அமெரிக்க டொலர்கள்) தண்டப்பணம்செலுத்த வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்ப வன்முறைகளில் பாதிக்கப்படும் ஒருவர் ஒரு வருடத்துக்குப் பாதுகாப்புக்கான கட்டளை மற்றும் பராமரிப்புச் செலவைக் கோரமுடியும். தம்பதியர் சட்டரீதியாக பரிந்துவாழ்ந்தால் மாத்திரமே திருமணம் சார்ந்த கற்பழிப்பை சட்டம் தடைசெய்கிறது.

பெப்ரவரி மாதம் இரண்டு ஆண்கள் நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தாதியர் ஒருவரை பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபடுத்தியுள்ளனர். இது தொடர்பில் முறைப்பாடு கிடைத்து ஐந்து நாட்களில் நாரஹேன்பிட்டி பொலிஸார் சந்தேகநபர்களை கைதுசெய்ததுடன் வருட இறுதிவரை இந்த வழக்கு நடைபெற்றது.

பொலிஸ் மற்றும் சட்டத்துறையின் எதிர்ச்செயற்பாடுகள் போதியதாக இல்லையென பெண்கள் அமைப்புக்கள் குறிப்பிடுகின்றன. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் பொலிஸ் பிரிவினர் பாடசாலைகள் மற்றும் கிராம மட்டங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து, பெண்கள் குடும்ப வன்முறைகள் குற்றிய முறைப்பாடுகளைச் செய்வதை ஊக்குவித்து வருகிறது. பொலிஸ் நிலையங்களில் பெண்கள் பிரிவுகள் அமைப்பது தொடர்ந்து வருகிறது. கற்பழிப்பு மற்றும் குடும்ப வன்முறைகளால்

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, சட்ட ரீதியான உதவி மற்றும் உளவளசிகிச்சைபோன்றவற்றை வழங்குவதற்கான நிலையங்கள் நாடு முழுவதிலும் மிகவும் குறைவாகவே காண்பபடுவதுடன், போதிய நிதியுதவியும் குறைவாகவே உள்ளது.

பெண்கள் பிறஉறுப்பு உருச்சிதைவுகள்/நீக்கல்கள் (FGM/C) : பெண் பிறஉறுப்புக்களில் சிதைவுகளை ஏற்படுத்துவது இலங்கை முஸ்லிம்கள் வரலாற்று ரீதியாகப் பின்பற்றிவரும் நடைமுறையாக உள்ளது. அண்மைய வருடங்களில் ஊடகங்களால் இது வெளிப்படுத்தப்படும்வரை இவ்விடயம் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலான புள்ளிவிபரங்கள் எதுவும் இல்லை என்பதுடன் இதற்கு எதிராக சட்டங்களும் இல்லை. பெண் பிறஉறுப்புக்களில் சிதைவுகளை ஏற்படுத்தும் வகையிலான மருத்துவ செயற்பாடுகளை தவிர்க்குமாறு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மே மாதம் சுற்றுநிருபமொன்றை வெளியிட்டிருந்தார். இருந்தபோதும் பெண் பிறஉறுப்புக்களில் சிதைவை ஏற்படுத்துவது குற்றமாக்கப்படவில்லை.

பாலியல் தெல்லைகள் : பாலியல் தொல்லைகள் குற்றவியல் குற்றம் என்பதுடன், ஆகக் கூடியது ஐந்து வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கமுடியும். பாலியல் தொல்லை என்பது பொதுவான பிரச்சினையாக இருப்பதுடன், பொதுப்போக்குவரத்தில் இது பாரிய பிரச்சினையாகவுள்ளது.

சனத்தொகை கட்டுப்படுத்தலில் உள்ள கட்டாயப்படுத்தல்கள் : கட்டாய கருக்கலைப்பு, விரும்பமின்றி மேற்கொள்ளப்படும் கருத்தடைகள் அல்லது கட்டாயமான சனத்தொகை கட்டுப்படுத்தல் முறைகள் முன்னெடுக்கப்படுவதாக எந்தத் தகவல்களும் இல்லை.

வேறுபாடு காண்பித்தல் : சிவில் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் ஆண்களுக்கு சமமான உரிமையை பெண்கள் கொண்டுள்ளனர். குடும்பச் சட்டம் தொடர்பான கேள்விகளுக்கு, திருமணம், விவாகரத்து, பிள்ளைகளைப்பராமரித்தல் மற்றும் பரம்பரை என்பன பல்வேறு வழமையான சட்டங்களால் பின்பற்றப்படுகின்றன. ஒவ்வொரு மத மற்றும் இனக் குழுக்களுக்கு வெவ்வேறு நடைமுறைகளைப் பின்பற்றுவதால் வேறுபாட்டில் முடிவடைகிறது.

**சிறுவர்கள்**

பிறப்பு பதிவுகள் : பெற்றோர்கள் ஊடாக சிறுவர்களுக்கு பிரஜாவுரிமைகிடைக்கிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் : பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டனைகள் தடைசெய்யப்பட வேண்டும் என்ற விதிகளை பாடசாலை அதிகாரிகள் மீறியமை தொடர்பில் அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் பொலிஸ் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டமைக்கான சாட்சிகள் மற்றும் தகவல்கள் உள்ளன. குற்றவியல் சட்டக்கோவையை மறுசீரமைப்பதற்கு வெற்றிகரமான முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் உள்ள சிறுவர்களுக்கு எதிராக பாலியல் துஷ்பிரயோகங்கள் உள்ளடங்கலான வன்முறைகள் அதிகளவில் இடம்பெறுவது தொடர்பில் பொதுமக்களின் கவனம் அதிகரித்துள்ளது. சிறுவர்கள் கடத்தப்படுவது, சிறுவர் தொழிலாளர்களைத் தடுப்பது போன்ற சாதாரண குற்றவியல் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களும் வலுத்துள்ளன. சிறுவர் துஷ்பிரயோக சம்பங்களின் அடிப்படையில் தண்டனை வேறுபடுகின்றபோதும், வழக்குகள் வருடக்கணக்காக இழுத்தடிக்கப்படுகின்றன.

சிறுவர்கள் மீதான வன்முறைகள் குறித்த பெரும்பலான முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் மேற்கொள்ளப்படும். சிறுவர்களுக்கு எதிரான கொடுமைகள், கல்வி கற்பதற்கான உரிமைகளை சிறுவர்கள் இழப்பது, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் தொழிலாளர்கள் போன்ற முறைப்பாடுகள் உரிய விதத்தில் எதிர்கொள்ளப்படும். ஆசிரியர்கள்,

பாடசாலை அதிபர்கள் மற்றும் மத போதனாசிரியர்கள் போன்றோர் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தவதாக முறைப்பாடுகள் உள்ளன. பல சிறுவர் கற்பழிப்பு வழக்குகளில் அரசாங்க அதிகாரிகளே குற்றழிழைத்தவர்கள் என சொல்லப்படுகிறது. சிறுவர்கள் விவகாரம் தொடர்பில் செயற்பட்டுவரும் சிவில் சமூக அமைப்புக்கள், சிறுவர்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் குறித்து முறையிடுவதற்கோ அல்லது துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பிலோ போதிய பொறிமுறையொன்று இல்லையெனச் சுட்டிக்காட்டுகின்றன. சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரங்கள் தொடர்பில் கையாழ்வதற்கு பொலிஸ் நிலையங்களில் அதிகாரிகள் தனியாக செயற்படுகின்றபோதும், நாடு முழுவதிலும் இதனை அரசாங்கம் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை.

<u>சிறுவயது மற்றும் பலவந்த திருமணங்கள்</u> : ஆண்களின் திருமணத்துக்கான ஆகக் குறைந்த சட்டரீதியான வயது 18 என்றும் பெண்களின் வயது 16 என்றும் சட்டத்தினால் வயது வரையறுக்கப்பட்டுள்ளது. 16வயதுக்கு குறைந்த பெண் பிள்ளையொருவரின் விருப்பத்துடன் அல்லது விரும்பம் இன்றி பாலியல் தொடர்புவைத்திருப்பது கற்பழிப்பாக அடையாளம் காணப்படுகிறது. எனினும், இந்தச் சட்டமானது 12 வயதில் திருமணம் செய்யும் முஸ்லிம்பெண்களுக்கு ஏற்புடையதல்ல. முஸ்லிம் விவாக மற்றும் விவகாரத்துச் சட்டமானது முஸ்லிம்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் மணமகளின் தந்தை அல்லது ஆண் உறவினரின் சம்மதத்துடன் 12 வயதில் பெண் பிள்ளையொருவர் திருமணம் செய்ய முடியும். மணமகளின் சம்மதம் அவசியமில்லை.

சிறுவர் பாலியல் சுற்றுலாத்துறை தொடர்ந்தும் பிரச்சினையாகவுள்ளது.

<u>இடம்பெயர்ந்த சிறுவர்கள்</u> : உள்நாட்டில் இடம்பெயந்தோர் நலன்புரி நிலையங்கள் மற்றும் மீளக்குடியமர்த்தும் பகுதிகளில் உள்ள சிறுவர்களும் பெரியவர்கள் எதிர்கொள்ளும் அதே பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

<u>சர்வதேச சிறுவர் கடத்தல்கள்</u> : சர்வதேச சிறுவர் கடத்தல்களுக்கு எதிரான ஹுேக சமவாயத்தில் 1980 ஆண்டு முதலே பங்காளராகவுள்ளது. இராஜங்கத் திணைக்களத்தின் பெற்றோர் சார்ந்த சிறுவர் கடத்தல் குறித்த வருடாந்த அறிக்கையை https://travel.state.gov/content/travel/en/International-Parental-ChildAbduction/for-providers/legal-reports-and-data.html. என்ற இணை இணைப்பில் பார்வையிடவும்.

### யூத எதிர்ப்பு

யூதர்களின் சனத்தொகை மிகவும் குறைவாகவே உள்ளது. யூத எதிர்ப்புத் தொடர்பான எந்த முறைப்பாடுகளும் இல்லை.

### ஆட்கடத்தல்கள்

இராஜாங்கத் திணைக்களத்தின் ஆட்களைக் கடத்துதல் தொடர்பான அறிக்கையை www.state.gov/j/tip/rls/tiprpt/ என்ற இணையத் தொர்பில் பார்வையிடவும்.

### அங்கவீனமானவர்கள்

பௌதீக, புலன்சார்ந்த, அறிவுத்திறன், உளரீதியான குறைபாடுகள் உள்ளவர்கள் பக்கச்சார்பாக நடத்தப்படுவதை சட்டம் தடுக்கிறது. இவர்கள் வேலையில், கல்வி, விமானப் பயணம், ஏனைய போக்குவரத்துக்களில் பக்கச்சார்பாக நடத்தப்படக்கூடாது என்பதை சட்டம் வலியுறுத்துகிறது. எனினும் நடைமுறையில் வேலைத்தளம், கல்வி, மற்றும் பொதுப்

போக்குவரத்து உள்ளிட்ட அரசாங்க சேவைகளில் வேறுபாடுகள் காண்பிக்கப்படுவது இடம்பெறுகிறது. குறைபாடுகள் உள்ள பிள்ளைகள் மிகவும் குறைவான அளவிலேயே பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். குறைபாடுகள் உள்ளவர்கள் நுழைவதற்கான வசதிகள் சகல கட்டடங்களிலும் இருக்கவேண்டும் என கட்டுப்பாடுகள் இருக்கின்றபோதும் நடைமுறையில் அது கடைப்பிடிக்கப்படுவது மிகவும் குறைவாகவே உள்ளது.

**தேசிய/இனம்ஃ. சார்ந்த சிறுபான்மையினர்**

உள்ளூர் மற்றும் இந்திய வம்சாவளி தமிழர்கள் பல்கலைக்கழகக் கல்வி, அரசாங்க வேலைவாய்ப்புக்கள், வீடுகள், சுகாதார வசதிகள், மொழிசட்டம் போன்ற முறைசார்ந்த பாரபட்சத்தினால் நீண்ட காலமாகக் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு முழுவதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமது சமூகத்தைச் சார்ந்த தமிழர்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவதுடன், விசேடமாக செயற்பாட்டாளர்கள், முன்னாள் அல்லது முன்னாள் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் சிவில் செயற்பாட்டாளர்கள், உள்நாட்டுத் தலைவர்கள் மற்றும் முன்னாள் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் தொந்தரவுக்கு உட்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் உள்ளன.

தமிழ் சிறுபான்மையினரின் அபிவிருத்தித் தேவைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேறுபட்ட அமைச்சுக்கள் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைப்புக்களை அரசாங்கம் அமைத்துள்ளது. தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நம்பிக்கையை கட்டியெழுப்பும் பல்வேறு திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த இராணுவ ஆளுநர்கள் சிவிலியன்களாக மாற்றப்பட்டனர். தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம் ஜனாதிபதியால் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், இது அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஒத்துழைப்புடன் இணைந்து செயற்படுவதாக அமைந்துள்ளது. இந்த அலுவலகமானது சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவது, பிரஜைகளின் மொழி உரிமையை பாதுகாத்தல், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் துயரைத்துடைத்தல் போன்றன முன்னெடுக்கப்பட்டன. வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகள் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. பாதுகாப்பு அமைச்சின் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள சலக தனியார் காணிகளையும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்குமாறு ஒக்டோபர் 4ஆம் திகதி பகிரங்கமாக அறிவித்தார். எனினும் கால வரையறையை நடைமுறைப்படுத்துவது நடைமுறையில் சாத்தியமற்றது என கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

புத்த தேசிய மதகுருமார் தொடர்ச்சியாக முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் சொத்துக்களுக்கு எதிரான தாக்குதல்களை தூண்டிவிட்டனர். மார்ச் மாதம் பௌத்த மதகுருமார் தலைமையிலான சிங்கள குண்டர்கள் முஸ்லிம்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். இதில் இருவர் உயிரிழந்ததுடன், 28 பேர் காயமடைந்து பெரும் ண்ணிக்கையான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன. இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்த உள்ளூர் அரசாங்கமும் சட்டம் ஒழுங்கு அதிகாரிகளும் தவறிவிட்டதாக கண்காணிப்பாளர்கள் குற்றஞ்சாட்டுவதுடன், சில பொலிஸ் அதிகாரிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் கலந்துகொண்டதாகவும் கூறப்படுகிறது. மத்திய அரசாங்கம் 10 நாட்கள் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியும், இராணுவத்தினரை அனுப்பி நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தும், சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தியும், குற்றமிழைத்த 150ற்கும் அதிகமானவர்களைக் கைதுசெய்தும் அரசாங்கம் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

**சுதேசிய மக்கள்**

வேடர்கள் என அறியப்படும் இந்நாட்டின் சுதேசிய மக்கள் ஆயிரக்கணக்கானவர்களே இருக்கின்றனர். இவர்களில் சிலர் தமது பாரம்பயரி வாழ்க்கையை தொடர்வதற்கு விரும்பியதுடன், அவர்களை பொதுவான சட்டம் பாதுகாக்கிறது. அவர்கள் எந்தவித சட்டச் சிக்கல்களும் இன்றி சுதந்திரமாக பொருளாதார மற்றும் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்ற முடியும் என்பதுடன், சிலர் சட்டரீதியான ஆவணங்களைக் கொண்டிருக்கவுமில்லை.

**பாலியல் ரீதியாக நோக்குவது மற்றும் பாலியல் அடையாளங்களை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள், பாரபட்சம் மற்றும் துஷ்பிரயோகங்கள்**

ஒரே இனத்தைச் சேர்ந்த வயது வந்தவர்கள் ஒப்புதலுடன் மேற்கொள்ளும் பாலியல் தொடர்புகள் குற்றம் என சட்டம் அடையாளப்படுத்துகிறது. இருந்தபோதும் இது தொடர்பான பாலியல் தொழில் மிகவும் அரிதாக இருப்பதுடன், எனினும் LGBT நபர்களை பாலியல் ரீதியாக சீண்டுவது, தாக்குவது, தொந்தரவுக்கு உட்படுத்துவது, கைதுசெய்வோம் என மிரட்டுவது போன்ற செயற்பாடுகளில் பொலிஸார் ஈடுபடுவதாக தகவல்கள் உள்ளன. ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் பாலியல் ரீதியான ஈடுபட்டதாக குற்றம் நிரூபிக்கப்பட்டால் 10 வருட சிறைத்தண்டனையை எதிர்நோக்கவேண்டியிருக்கும். பாரபட்சத்துக்கு எதிரான சட்டம், பாலியல் ரீதியாக மற்றும் பாலியல் அடையாளத்துக்காக மேற்கொள்ளப்படும் பாராட்சமான செயற்பாடுகளைத் தடுக்கவில்லை.

திருநங்கைகள் தொடர்ச்சியாக சமூக ரீதியான பாரபட்சகள், பலவந்தமான தடுத்துவைப்புக்கள், தவறாக நடத்தப்படுவது, தொழில்வழங்குவதில் பாரட்சம்பம், வீடுகள் மற்றும் சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பாரபட்சம் என பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

**எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் சமூகக் களங்கம்**

எச்.ஐ.வி தடுப்புசேவையைப் பெறும் நபர் மற்றும் இந்த நோய் பரவுவதற்கான ஆபத்தை எதிர்கொள்ளும் குழுவினர் பாரிய ஒதுக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். இதற்கு மேலதிகமாக வைத்தியசாலை அதிகாரிகள் எச்.ஐ.வி நோய் உடைய ஒருவரை பகிரங்கமாக அறிவிப்பதுடன், எச்.ஐ.வி நோய் உடையவர்களுக்கு மருத்துவ உதவி வழங்க முடியாது என மறுத்த சில சந்தர்ப்பங்களும் உள்ளன.

**ஏனைய சமூக வன்முறைகள் மற்றும் ஒதுக்குதல்கள்**

புத்தசாசன அமைச்சின் அனுமதியைப் பெறவில்லையெனக் கூறி கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய வணக்கஸ்தலங்களை முடுவதற்கு சில பௌத்த குருமார் முற்சிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை நஷனல் கிறிஸ்டியன் இவஞ்செலிக்கல் அலயன்ஸ் கிறிஸ்தவ தேவாலயங்களின் மீது அவ்வாறு நடத்தப்பட்ட 65 தாக்குதல் சம்பவங்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் அறிக்கையிட்டுள்ளன. பாதிரியார்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல்கள், வழிபாட்டுக்கு இடையூறுவிளைவித்தமை போன்ற சம்பவங்கள் செம்டெம்பர் மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

**பகுதி 7. தொழிலாளர் உரிமை**

**அ. ஒன்றிணைவதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டாக பேரம் பேசுவதற்கான உரிமை**

தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் இணைவதற்கும் அவற்றை உருவாக்குவதற்குமான உரிமையை சட்டம் வழங்குகிறது. இதில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார், சட்டத்துறை

அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் விதிவிலக்கானவர்கள். அத்தியாவசியமற்ற சேவை தொழில்துறையில் உள்ள தொழிலாளர்கள், பொதுச் சேவை தொழிற்சங்கங்களில் பணியாற்றுபவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் கூட்டாக பேரம்பேசுவதற்கான சட்ட உரிமையைக் கொண்டுள்ளனர். வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கான உரிமையை சட்டம் வெளிப்படையாக மறுக்கவில்லை. எனினும், தொழிற்சங்க ரீதியான மற்றும் தொழில்ரீதியான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவதை நீதிமன்றங்கள் அங்கீகரித்துள்ளன. தொழிற்சங்கம் இல்லாத தொழிலாளர் கவுன்ஸில் ஏற்றுமதி செயற்பாட்டு வலையங்களில் உள்ள தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் உள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கம் இல்லாத தொழிலாளர் கவுன்ஸில் என்பன கூட்டாக பேரம்பேசுவதற்கான உரிமையைக் கொண்டிருப்பதாக முதலீட்டு சபை சுட்டிக்காட்டுகிறது.

பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான அவசர காலச்சட்டத்தின் கீழ் தேசிய பாதுகாப்புக்கு அவசியமான, சமூகத்தின் வாழ்வு அல்லது பொது நடவடிக்கைகளின் இடையறாத செயற்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட தொழிலாளர்களுக்குக் காணப்படும் சட்டரீதியான உரிமையை மீறப்பெறும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டுள்ளார். பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்துக்கு அப்பால், 1979ஆம் ஆண்டு அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் அரசாங்க முகவர்களால் வழங்கப்படும் பொதுச் சேவையை அத்தியாவசிய தேவையாக பிரகடனப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு அரசாங்கம் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தைப் பயன்படுத்தி ரயில்வே மற்றும் பெற்றோலியத் துறைகளை அத்த்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தத் தொடங்கியது. ஊழியர்களின் வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்தே இதுபற்றிய முடிவு எடுக்கப்பட்டது.

அத்தியாவசியமற்ற துறையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக பழிவாங்கும் செயற்பாடுகளை சட்டம் தடுக்கிறது. ஏழு தொழிலாளர்கள் இணைந்து தொழிற்சங்கமொன்றை உருவாக்கி, அதற்கான சரத்தை நிறைவேற்றி, தலைவரைத் தெரிவுசெய்து, தமது கருத்தைப் பகிரங்கப்படுத்தமுடியும். எனினும், குறிப்பிடப்பட்ட தொழில்துறையில் உள்ள தொழிலாளர்களில் 40 வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலே தொழில்தருணருடன் குறித்த தொழிற்சங்கம் பேரம்பேச முடியும் என சட்டம் குறிப்பிடுகிறது. அரசாங்கத்துறையில் உள்ள தொழிற்சங்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அரசாங்கத் திணைக்கள தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கோ அல்லது அவர்களை இணைந்து சம்மேளனமொன்றை உருவாக்குவதற்கோ சட்டம் இடமளிக்கவில்லை. வருடாந்த அறிக்கையை மூன்று வருடங்கள் சமர்ப்பிக்கத்தவறும் தொழிற்சங்கமொன்றின் பதிவை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் தொழில் அமைச்சுக்கு உள்ளது.

தொழிற்சங்கங்களுக்கு எதிரான பாரபட்சத்தை சட்டம் தடுக்கிறது. வீடுகள் அல்லது ஏனைய உத்தியோகபூர்வமற்ற துறையில் உள்ள பணியாளர்களை தொழிலாளர் சட்டம் உள்வாங்கவில்லை.

எந்தவித தலையீடும் இன்றி தொழிற்சங்கங்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க சட்டம் அனுமதியளிக்கின்றபோதும், அரசாங்கம் அதனை மீறும் வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். தொழிற்சங்க செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்படும் பாரபட்சமான வன்முறைகளுக்கு ஒரு இலட்சம் ரூபா (578 அமெரிக்க டொலர்) தண்டப்பணம் அறவிடப்படலாம். தொழிற்சங்க செயற்பாட்டில் ஈடுபட்டதற்காக தொழிலாளர் ஒருவரை தொழில்தருணம் இடைநிறுத்துவதை சட்டம் குற்றமாகப் பார்க்கின்றபோதும், வேறு இடத்துக்கு மாற்றம் செய்யமுடியும். பொதுவாக இவ்வாறான தண்டனைகள் வன்முறைகளைத் தடுப்பதற்குப் போதுமானதாக இல்லை. நியாயமற்ற முறையில் தொழிலாளர்கள் நடத்தப்படுவதற்கு எதிராக மற்றும் தொழிற்சங்கத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தொழில் அமைச்சுக்கு மாத்திரமே சட்டரீதியான அங்கீகாரம் உள்ளது.

தொழில்துறை முரண்பாடு சட்டத்தின் கீழ் நியாயமற்றமுறையில் தொழிலாளர்கள் நடத்தப்பட்டமை தொடர்பில் 1999ஆம் ஆண்டுமுதல் இதுவரை தொழில் அமைச்சு 10 வழக்குகளையே தாக்கல் செய்துள்ளது. இந்த வருடத்தில் தொழில் அமைச்சு நியாயமற்றமுறையில் தொழிலாளர்கள் நடத்தப்பட்டமை தொடர்பில் ஒரு வழக்கை பதிவுசெய்துள்ளது. நீதிமன்றங்கள் இரண்டு வழக்குகளுக்கு தீர்ப்பை வழங்கியிருப்பதுடன், மேலும் எட்டு வழக்குகள் தொடர்கின்றன. தொழில் உரிமைகள் மீறப்படுவது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுப்பதில்லையென்ற நிலைப்பாடு காணப்படுவதுடன், சில சிறிய தொழிற்சங்கங்கள் வழக்குகளைத் தொடுப்பதற்கான செலவுகளைத் தாங்கமுடியாமல் உள்ளன. தொழில் முடிவுறுத்தல் மற்றும் பெண்கள் சட்டத்தின் கீழ் சில தொழிலாளர் உரிமை மீறல் வழக்குகள் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டுளளன. இந்த வழக்குகளை விசாரிப்பதில் நீண்டகால இழுபறி காணப்படுகிறது. தொழில்துறை முரண்பாட்டுச் சட்டம் அரசாங்கத் துறை மற்றும் அரசாங்கத்துறை தொழிற்சங்கங்களுக்குப் பொருத்தமற்றது.

ஒன்றிணைவதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டாக பேரம்பேசுவதற்குக் காணப்படும் உரிமையை அரசாங்கம் பொதுவாக மதித்து வருகிறது. துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தனியார் மருத்துவ கல்லூரிகள் மருத்துவப் பட்டத்தை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அரசாங்கத்துறை தொழிற்சங்கங்கள் பல்வேறு வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தன.

அரசாங்கத்துறையில் உள்ள சில தொழிற்சங்கங்கள் அரசியல் தொடர்புகளைக் கொண்டிருக்காதபோதும், பெரும்பாலான தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் இணைந்திருப்பதுடன், அரசியல் செயற்பாடுகளில் முன்னுரிமையாக ஈடுபடுகின்றன.

கூட்டாக பேரம் பேசக்கூடிய தொழிற்சங்கங்களை அடையாளம் காணுவதில் தொழில்தருணர்கள் இழுத்தடிப்புச் செய்வதாக தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டுவதுடன், தொழிற்சங்கம் உருவாக்குவதற்கான ஆதரவை வழங்காதிருப்பது, தொழிற்சங்க செயற்பாடுகளில் ஈடுபட்டால் அதற்கு எதிராக அச்சுறுத்துவது போன்ற பிரச்சினைகள் காணப்படுவதாகவும் அவை சுட்டிக்காட்டுகின்றன. தொழிற்சங்கமொன்று பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்து 30 வேலைநாட்களுக்குள் தேர்தலை நடத்தவேண்டும் என்றும், ஏதாவது ஆட்சேபனைகள் இருந்தால் 45 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு குறித்த தொழிற்சங்கத்துக்கான சான்றிதழை வழங்குமாறு தொழில் அமைச்சு, தொழில் ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு தொழில் ஆணையாளர் ஐந்து தொழிற்சங்கங்களுக்கு சான்றிதழுக்கான தேர்தலை நடத்தியிருந்தார். எனினும் ஜனவரி முதல் செப்டெம்பர் வரையில் எந்தவொரு தொழிற்சங்கத்துக்கும் தேர்தல் நடத்தி சான்றிதழ் வழங்கப்படவில்லை.

### ஆ. பலவந்தமான அல்லது கட்டாயமான வேலையை தடுத்தல்

சுகல வழிகளிலும் பலவந்தமாக அல்லது கட்டாயப்படுத்தி வேலைவாங்குவதை சட்டம் தடைசெய்கின்றபோதும், இதனை மீறுபவர்களுக்கு போதுமான தண்டனைகள் இல்லை. அரசாங்கம் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபோதும் அதனை கண்காணிப்பது மற்றும் மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு போதிய முயற்சிகள் எடுக்கப்படுவதில்லை. வீட்டு வேலைகளில் ஈடுபடுபவர்களை தொழில் அமைச்சு கண்காணிக்காது. மோசடியான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்களை அனுப்பும் தொழில்முகவர் நிறுவனங்களை அரசாங்கம் அவ்வப்போது கண்டுபிடித்து வழக்குத் தாக்கல் செய்கின்றபோதும், இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகத் தடுப்பதற்கு அமைச்சுக்களுக்கு இடையிலான ஒத்துழைப்புக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை.

14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் வீடுகளில் தங்கியிருந்து பலவந்தமாக பணியாற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (பகுதி 7.இ ஐ பார்க்கவும்)

அத்துடன், இராஜாங்கத் திணைக்களத்தின் ஆட்கடத்தல் தொடர்பான அறிக்கையை www.state.gov/j/tip/rls/tiprpt/ என்ற இணையத்தொடர்பில் பார்க்கவும்.

**இ.சிறுவர் தொழிலாளர்கள் மற்றும் ஆகக் குறைந்த வயதில் தொழில்வாய்ப்பு**

தொழில் செய்வதற்கான ஆகக்குறைந்த வயது 14ஆகக் காணப்படுகின்றபோதும், பெற்றோல் அல்லது பாதுகாவலர்களுடன் இணைந்து வீட்டில் உள்ள பிள்ளைகள் வரையறுக்கப்பட்ட குடும்ப விவசாயம் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி போன்றவற்றில் ஈடுபடுவதற்கு சட்டம் அனுமதிவழங்குகிறது. 2016ஆம் ஆண்டு கட்டாயக் கல்வி பெறவேண்டிய வயதை அரசாங்கம் 14இல் இருந்து 16ஆக அதிகரித்தது. 18 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதை சட்டம் தடுக்கிறது. 14 வயது முதல் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் நாளொன்றுக்கு 9 மணித்தியாலங்களே பணியாற்ற வேண்டும் என்றும், 16 வயது முதல் 17 வயது வரையானவர்கள் நாளொன்றுக்கு 10 மணித்தியாலங்களே பணியாற்ற வேண்டும் என சட்டம் வரையறுத்துள்ளது. ஒரு வீதமானவர்களே ஏறத்தாழ 40,000 பேரே ஆபத்தான வேலைகளில் ஈடுபடுவதாக அரசாங்கம் கணிப்பிட்டுள்ளது.

விதிமீறல்களைத் தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் தண்டனைகளை அரசாங்கம் வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்தவில்லை.

மோசமான சிறுவர் தொழிலாளர் நிலைமைகளை இல்லாமல் செய்வதற்கு தொழில் அமைச்சு சில முன்னேற்றகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. சிறுவர் தொழிலாளர்களைக் குறைக்கும் நோக்கில் 24 மாவட்டங்களிலும் அரசாங்கம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களை நியமித்திருப்பதுடன், மாவட்ட அதிகாரிகளுக்கு புதிய வழிகாட்டல்களையும் அரசு வழங்கியுள்ளது. சிறுவர் தொழிலாளர்களுக்கு ஆபத்தான பகுதிகளை தொழில் அமைச்சு தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறது.

2016 பெப்ரவரி மாதம் வெளியான சிறுவர் செயற்பாட்டு கணக்கெடுப்பின் படி, தொழிற்சாலைகள் மற்றும் சேவைத் துறையிலேயே பெரும்பாலான சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். கட்டுமானப் பணிகள், உற்பத்தி, அகழ்வு மற்றும் மீன்பிடித்துறை, துப்பரவுத் தொழில், உதவியாளர்கள், வீட்டுப் பணியாளர்கள் மற்றும் வீதியோர விற்பனையாளர்கள் போன்றவற்றிலேயே அதிகமாக சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுவதாக அந்தக் கணக்கெடுப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அறுவடை காலத்தில் சிறுவர்கள் விவசாயத்திலும் பணியாற்றகின்றனர். யுத்தத்தினால் இடம்பெயர்ந்த சிறுவர்கள் ஆபத்தான தொழில்களில் பாதிக்கப்படும் நிலையில் உள்ளனர்.

பதினெட்டு வயதுக்குக் குறைவான சிறுவர்கள் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளபோதும் வீடுகளில் பணியாற்றுவது இதில் உள்ளடக்கப்படவில்லை.இதனால் வீடுகளில் பணியாற்றும் சிறுவர் தொழிலாளிகள் பௌதீக, பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. குடும்ப விவசாயம், கைத்தொழில், சிறிய வர்த்தக செயற்பாடுகள், உணவு விடுதிகள், திருத்துமிடங்கள் போன்ற குடும்ப ரீதியாக மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புக்களில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். குற்றவாளிகள் சிறுவர்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி குறிப்பாக கரையோரப் பகுதிகளில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துகின்றனர். (பகுதி 6 சிறுவர் ஐ பார்க்கவும்)

அத்துடன், தொழில்திணைக்களத்தின் சிறுவர் தொழிலாளர்களின் மோசமான நிலைமைகள் பற்றிய கணிப்பீடுகளை www.dol.gov/ilab/reports/child-labor/findings/ என்ற இணைத் தொடர்பில் பார்வையிடவும்.

### ஈ. தொழில் மற்றும் பணிமுறைக்கு மதிப்பளிக்காத பாரட்சம்

இனம், மதம், மொழி, குலம், பால், அரசியல் நிலைப்பாடு அல்லது பிறந்த இடம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழில் மற்றும் பணிமுறைக்கு மதிப்பளதிக்காது பாரபட்சமாக நடப்பது அரசியலமைப்பினால் தடைசெய்யப்படுகிறது. நிறம், பாலியல் அடையாளம், வயது, எச்.ஐ.வி அல்லது நோய் தொற்று என்பவற்றின் அடிப்படையில் பணியாற்றுவதற்கான வாய்ப்பிலிருந்து ஒதுக்குவதை சட்டம் தடைசெய்கிறது. அரசாங்கம் இந்தச் சட்டத்தைவினைத்திறனாக நடைமுறைப்படுத்தவில்லை என்பதுடன், மேற்குறிப்பிட்ட அடிப்படையில் பாரபட்சங்கள் தொடர்கின்றன. உதாரணமாக குறிப்பிட்ட பதவியொன்றுக்கு தொழில்வழங்குனர் ஆண் அல்லது பெண் ஒருவரிடமிருந்து விண்ணப்பத்தைக் கோருகின்றார். சில சமயங்களில் ஒரே வேலையில் ஆண்களைவிட பெண்கள் குறைந்த சம்பளத்தைப் பெறுகின்றனர்.

### உ. வேலையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமைகள்

ஆகக் குறைந்த சம்பளம் தொடர்பான சட்டத்தை முதன் முறையாக பாராளுமன்றம் 2016ஆம் நிறைவேற்றியது. இதற்கமைய ஆகக்குறைந்த சம்பளம் மாதமொன்றுக்கு 10,000 ரூபாவாக (58 டொலர்) இருப்பதுடன், நாளொன்றுக்கு 400 ரூபாவாக (2.31 டொலர்)இருக்க வேண்டும். தொழிலாளர் திணைக்களத்துக்கு மேலதிகமாக 44 சம்பள சபை, தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களுடன் கலந்துரையாடி பல்வேறு தொழில் சூழல்களுக்கு துறைசார் ரீதியில் ஆகக்குறைந்த சம்பளத்தை நிர்ணயித்துள்ளது. இவ்வருடத்தில் அரசாங்க ஊழியர்களின் ஆகக்குறைந்த சம்பளம் 32,040 ரூபாவாக (185 டொலர்) அரசாங்கத் துறையில் ஆகக்குறைந்த சம்பளமாக 32,040 ரூபாவாக (214 டொலர்) காணப்படுவதுடன், 2016ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டுவரை இந்தத் தொகையில் மாற்றம் ஏற்படவில்லை. வறுமை மட்டமாக மாதமொன்றுக்கு 4,659 ரூபாவாக (26.90 டொலர்) அதிகாரிகளால் கணிப்பிடப்பட்டுள்ளது.

முழுநேர வேலையில் உள்ளவர்கள் வாரமொன்றுக்கு 45 மணித்தியாலத்துக்கு அதிகமாக பணியாற்றுவதை சட்டம் தடுக்கிறது. மேலதிகமாக நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலம் ஓய்வுநேரம் வழங்கப்பட வேண்டும் என்பதையும் சட்டம் வரையறுத்துள்ளது. வாரமொன்றுக்கு மேலதிக வேலை நேரம் 15 மணித்தியாலங்களாக அமைய வேண்டும் என்றும் சட்டம் வரையறுக்கிறது. மேலதிக நேரக் கொடுப்பனவானது அடிப்படைச் சம்பளத்தில் 1.5 வீதமாக இருப்பதுடன், வாரமொன்றில் 45 மணித்தியாலத்துக்கு மேலதிகமாக பணியாற்றிய ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களுக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். இந்த சட்டப்பிரிவானது முகாமையாளர்கள் மற்றும் பொது நிறுவனங்களில் உள்ள நிறைவேற்று அதிகாரிகளுக்கு ஏற்புடையதல்ல. வருடாந்த விடுமுறைகளுக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என சட்டம் குறிப்பிடுகிறது.

தொழில்ரீதியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தரநிலைகளை அரசாங்கம் நிர்ணயித்துள்ளது. அச்சுறுத்தலான சூழலில் தொழிலாளர்கள் தம்மை விடுவித்துக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். எனினும் இந்த உரிமை தொடர்பில் பெரும்பாலான தொழிலாளர்கள் அறிந்துகொள்ளாதிருப்பதுடன், தொழிலை இழக்கவேண்டும் என்ற அச்சத்தைக் கொண்டுள்ளனர்.

ஆகக்குறைந்த சம்பளம், வேலை மணித்தியாலங்கள் மற்றும் தொழில்ரீதியான பாதுகாப்பு மற்றும் சாகதார தரநிலைகளை அதிகாரிகள் வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதில்லை. இவற்றை கண்காணிப்பதில் தொழில் அமைச்சின் செயற்பாடு போதுமானதாக இல்லை. கட்டுமானத் துறை, விமான நிலையம், துறைமுகம் மற்றும்வீதி கட்டுமானம் போன்ற உட்கட்டமைப்பு வசதித் திட்டங்களில் தொழில்துறைசார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தரங்கள் பேணப்படுவது அதிகரித்துள்ளது. குறிப்பாக கட்டுமானத் துறையில் உள்ள தொழில்தருணர்கள் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பயன்படுத்துவதை வழமையாகக் கொண்டுள்ளனர். ஒப்பந்த தொழிலாளர்கள் குறைந்த தொழில்பாதுகாப்பையேகொண்டுள்ளனர்.

தொழில் தருணர்கள் தமது தொழிலாளர்களுக்கு முழுமையான சம்பளங்களை வழங்குகின்றனரா மற்றும் ஓய்வூதியத்துக்கான பங்களிப்பைச் செலுத்துகின்றனரா என்பதை தொழில் அமைச்சின் மேற்பார்வையாளர்கள் பரிசீலிப்பார்கள். அமைச்சின் இந்த மேற்பார்வை வினைத்திறனுடையதா என தொழிற்சங்கங்கள் கேள்வியெழுப்புகின்றன. வினைத்திறனான மேற்பார்வையை மேற்கொள்வதற்கு தொழில் அமைச்சு கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் முறையை பயன்படுத்திவருகிறது. உரிய சம்பளம் வழங்காமை மற்றும் ஓய்வூதியத்துக்கான கொடுப்பனவு வழங்காமை போன்றவற்றுக்கான தண்டப்பணங்கள் பல்வேறு மட்டங்களில் காணப்படுகின்றன. முதலாவது குற்றத்துக்கு 100 ரூபா (0.58 டொலர்) முதல் 250 (1.44 டொலர்) ரூபாவரையும், இரண்டாவது குற்றத்துக்காக 250 ரூபா (1.44 டொலர்) முதல் 500 ரூபா (2.89 டொலர்) வரையும், மூன்றாவது குற்றத்துக்காக 1000 ரூபா (5.78 டொலர்) அல்லது ஆறுமாத சிறைத்தண்டனை என்பன வழங்கப்படும். கடை மற்றும் அலுவலக சட்டத்தின் கீழ் வேலை மணித்தியால மீறலுக்கு 500 ரூபா (2.89 டொலர்) தண்டப்பணம் அல்லது ஆறுமாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும் வழங்கப்படலாம். தண்டனை வழங்கப்பட்ட பின்னரும் அதே குற்றம் தொடர்ந்தால் நாளொன்றுக்கு 50 ரூபா (0.29 டொலர்) அறவிடப்படும். எனினும், இந்தத் தண்டப்பணம் விதிமீறல்களைத் தடுப்பதற்குப் போதுமானதாக இல்லை. தொழில் மேற்பார்வையாளர்கள் சம்பளங்கள் அல்லது தொழில் சூழ்நிலைகள் அல்லது வழங்கப்பட்டுள்ள திட்டங்கள், சமூகப் பாதுகாப்பு என்பவற்றை சரியான முறையில் கண்காணிப்பதில்லை.

முறைசாரா தொழில்துறை தொடர்பில் நம்பகமான தகவல்கள் எதுவும் இல்லை என்பதுடன், தொழில்துறைகளை எந்த அரசாங்க முகவரும் பின்தொடரவில்லை.